Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1325)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 20 புதன்கிழமை (02.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 215


கல்விப் பின்னடைவுக்கு காரணம்... (03)

தமிழீழக் கனவு தந்திரோபாயமே! (10)



கல்விக்காகப் பயன்படுத்துங்கள் (04)



காணாமற்போன கனவுக் கன்னிகள் (17)


பதவிகளையும் துறப்போம் (09)

# யாழ். நகரில் மாபெரும் எழுச்சி



(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தையொட்டி யாழ்.நகரில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மாபெரும் எழிச்சிப் பேரணி நடைபெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்த மே தின அறைகூவலையடுத்து வடபகுதியின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அணி அணியாகத் திரண்டு வந்த தொழிலாளர்கள், பொது மக்கள் மற்றும் பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் இப் பேரணியில் பங்குகொண்டனர்.

தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் அரசியல் உரிமைகளை வலியுறுத்தியும் பல்வேறு பதாதைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு மக்கள் திரள் சாரி சாரியாக அணிவகுத்து யாழ்.நகரில் உள்ள வேம்படிச் சந்தியை வந்தடைந்தனர். தீவகப் பகுதிகளில் இருந்து புறப்பட்ட மக்கள் யாழ். முற்றவெளிப் பகுதியில் ஒன்று திரண்டு அணி வகுத்து

(19) ஆம் பக்கம் பார்க்க

# அரசியல் உரிமை வெற்றுக் கோஷமல்ல

(யாழ்ப்பாணம்)

உரிமை என்பது வெறுமனவே பேசிக்கொண்டிருப்பதற்கான வெற்றுக் கோஷமல்ல. அது அடைந்தே தீரவேண்டிய மக்களின் மாபெரும் சுதந்திரச் சொத்து என பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் மே தினப் பொதுக்கூட்டம் யாழ்.மாநகர சபை திடலில் நேற்று மாலை 4.00 மணிக்கு இடம்பெற்றபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இன்றைய தினம் உழைக்கும் மக்கள் உரிமை வென்ற தினம். வெறும் சுயலாபங்களுக்காக வெற்றுக் கோஷங்கள் எழுப்பாது சிந்திய வியர்வைக்கும், உழைப்புக்கும் உரிமை கேட்டு உழைக்கும் மக்கள் உரிமை பெற்ற தினம்

இன்றைய இந்த உன்னத தினத்தில் நாம் ஒன்றுபட்டு தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உரிமை கேட்க ஒன்றுபட்ட இந்த நாளில் நாம் அரசியல் உரிமைகளுக்காக மட்டும் போராட புறப்பட்டவர்கள் அல்ல. உரிமை என்பது வெறுமனே பிரச்சினைகளோடு சமந்தப்பட்டது அல்ல.

எமது மக்களை மேம்படுத்தி அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்காக எம்மை அர்ப்பணம் செய்யும் உன்னதமான பணிகளையும் நாம் செய்கின்றோம்.

உணர்ச்சி பொங்கப் பேசிவிட்டு மக்களை வீதிக்கு அழைத்துவிட்டு நாட்டை விட்டுத் தப்பி ஓடுவது மக்களுக்கான சரியான உரிமைப் போராட்டம் அல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றுக் கோஷங்கள் எமது மக்களிடையே இனி ஒரு போதும் செல்லுபடியாகாது.

எமது மக்கள் யதார்த்தமான அரசியல் உரிமைகளை நாடி அணிதிரளத் தொடங்கி விட்டார்கள்.

சுயலாப அரசியல் கட்சிக்ள்

(19) ஆம் பக்கம் பார்க்க

# உழைப்பாளிகளுக்கே வெற்றியின் பெருமை

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. இந்த வெற்றிக்கான எல்லாப் பெருமையும் உழைக்கும் மக்களையே சாரும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உழைக்கும் மக்களின் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி உள்ளிட்ட முக்கிய விடயங்களில் அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

உலகெங்கும் வாழும் உழைக்கும் மக்களுடன் சேர்ந்து சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் இலங்கை உழைக்கும் மக்களுக்கு சகோதரத்துவத்துடன் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். சர்வதேச தொழில் தாபனத்தின் உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் முழுமையாக மதிக்கும் எமது தொழில் நியமங்கள் மற்றும் நடை முறைகளுக்கு உலகலவில் கிடைத்துள்ள அங்கீகாரத்தையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# யுத்தம் செய்யாமல் யாழ்ப்பாணத்தில் கால் பதித்தோம்

(யாழ்ப்பாணம்)

ஆயுதம் தூக்கி யுத்தம் எதுவும் செய்யாமலே நாங்கள் யாழ்.மண்ணில் கால் பதித்தோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் குருநகர் சென்.றொக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு மே தினப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கட்டித்தழுவும் உறவு...



# நாச்சிக்குடா மக்களுக்கு அசௌகரியம் கள்ளுத்தவறணை இடமாற்றம்



நாச்சிக்குடா கரடிக்குன்றுப் பிரதேசத்தில் இருக்கும் தவறணையால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைச் சுட்டிக்காட்டியவேளை குறித்த தவறணையை இரண்டு நாட்களில் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு முழங்காவில் பொலிஸ் பொறுப்பதிகாரி எட்வேட் திலகரட்ன உறுதியளித்தார்.

நேற்று முன்தினம் நாச்சிக்குடா பாடசாலையில் பொதுமக்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெகுவிரைவில் சிவில் பொலிஸ் காரியாலயம் ஒன்று நாச்சிக்குடாவில் அமைக்கப்படவுள்ளது. இதேபோல் முழங்காவில் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஏனைய நான்கு கிராமங்களுக்கும் தனித்தனி சிவில் பொலிஸ் காரியாலயம் திறக்கப்படவுள்ளது.

இதேவேளை, நாச்சிக்குடா மக்களில் பலருக்கு தேசிய அடையாள அட்டை உட்பட முக்கிய பல ஆவணங்கள் இல்லாத நிலையைக் கருத்தில் எடுத்து எதிர்வரும் 27 ஆம் திகதி பொலிஸ்நடமாடும் சேவை ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் முழங்காவில் பொலிஸ் அதிகாரி எட்வேட் திலகரட்ன, உதவிப் பொலிஸ் அதிகாரி சோமபால மற்றும் கிராம சேவையாளர் நகுலேஸ்வரம் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கைதடியில் கொள்ளை

(திருநெல்வேலி)

கைதடியில் உள்ள வீடு ஒன்றில் சுமார் ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைதடி ஏ-9 வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் தங்க நகைகளுடன் பெறுமதி மிக்க கைத்தொலைபேசி ஒன்றும் திருட்டுப்போயுள்ளது.

இரவு 10.00 மணியளவில் வீட்டிலுள்ளவர்கள் அறையொன்றில் இருந்து தமது அலுவல்களை மேற்கொண்டிருந்த வேளையில் மிகவும் தந்திரமான முறையில் மற்றைய அறைக்குள் புகுந்த திருடன் 15 பவுண் நகைகளையும் கைத்தொலைபேசியையும் திருடிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த வீட்டிலிருந்த வாய்பேச முடியாத பெண்ணொருவர் அறைக்குள்ளிருந்த வீட்டுக்காரர்களுக்குச் சைகை மூலம் திருடனைப் பற்றி விளக்கியதையடுத்து வீட்டுக்காரர்கள் உசாரடைந்து அறைக்குள் சென்று பார்த்தபோது நகைகள் மற்றும் கைத்தொலைபேசி களவாடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. அவர்கள் பலத்த அதிர்ச்சிக்குள்ளாகினர்.

இக்களவு பற்றி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (137)

# குடிநீர் வசதியை சீர்செய்யாத வலி.தென்மேற்குப் பிரதேச சபை

கடந்த ஒரு மாதங்களாகச் செயற்பட்டுவருகின்ற பிரதேச சபை மானிப்பாய் உப அலுவலக நிர்வாகம் மக்களுக்கு அத்தியாவசியமான தேவையாக உள்ள குடிநீரைக்கூட சீராக வழங்கவில்லை என மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் வலி. தென்மேற்குப் பிரதேச சபை எதிரக்கட்சித் தலைவருமான வெ.அனரன் ஜோன்சன் (ஜீவா), குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது. ஆனால் அவை நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. இதுவரை நிறைவேற்றிய தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தாமல் இனி புதிய தீர்மானங்கள் கொண்டுவருவதில் பயனில்லை.

மக்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் அவற்றை தெரிந்துகொண்டு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

இதற்காக இந்தச்சபை மாதத்தில் குறித்த ஒரு தடவை மக்கள் சந்திப்பு மேற்கொள்ள வேண்டும். மக்கள் சந்திப்பில் ஆளும் கட்சியால் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாவிட்டால் எம்மிடம் விட்டு விடுங்கள். நாம் அவற்றை தீர்த்து வைப்போம் என்றார். (54)

# செயற்கைமுறைச் சினைப்படுத்தல் 350 பசுக்கள் கன்றுகள் ஈன்றன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்நடை வைத்திய நிலையத்தால் செயற்கை முறையில் சினைப்படுத்தலில் கடந்த ஒரு வருடத்தில் 350 பசுக்கள் கன்றுகள் ஈன்றுள்ளதாக கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இதுவரை காலமும் யாழ். மாவட்டத்தில் திருநெல்வேலிப் பகுதியில் செயற்கைமுறையிலான விந்து சேகரிக்கும் நிலையம் இயங்கிவந்தது. குறித்த நிலையம் மூடப்பட்ட பின் பசுமாடுகளுக்கு விந்துகள் கண்டி குண்டகசாலை மத்திய நிலையத்தில் இருந்து அதிகுளிரூட்டிய நிலையில் நல்லினக் காளைகளின் விந்துகள் யாழ். மாவட்டத்தில் உள்ள கால்நடை வைத்திய நிலையங்களுக்குப் பெறப்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக பருத்தித்துறை கால் நடை வைத்திய நிலையத்தினரால் கிராமத்தில் உள்ள பசுக்களுக்கு ஐரோப்பிய இனமான (ஜெசி) இந்திய இனமான (சசிவால்) சகிவால் ஜெசி கலப்பு நல்லினக் காளை மாடுகளுக்குரிய விந்துகள் செயற்கை முறையில் பெறப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது சென்ற வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரை 1027 பசுமாடுகளுக்கு பெறப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது சென்றவருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 350 மாடுகளுக்கு சினை உண்டானது. ஏனைய பசுமாடுகளுக்கு மேலும் ஒருமுறை பயனளிக்கும் விதத்தில் சினைப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை கால்நடை வைத்திய நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்பட்டுவரும் ஏனைய பசுமாடுகளுக்கும் செயற்கை முறையிலான சினைப்படுத்தல் இடம்பெற்றுவருவதாக அவர் தெரிவித்தார். (116)



நீர்வேலி கந்தசாமி கோவிலில் நேற்றைய தினம் இடம்பெற்ற காவடித் திருவிழாவின் போது...

# ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி நெறிகள் மே 15 ஆரம்பம்

ஆசிரிய உதவியாளர் நியமனம் கிடைக்கப்பெற்றவர்களுக்கான ஈராண்டுப் பயிற்சி நெறி மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய், பலாலி ஆகிய ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி நெறிக்கு மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் உடற்கல்விப் பயிற்சி நெறிக்குரிய மைதான வசதிகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் உள்ளதால் அவ்வாசிரியர்களுக்கான பயிற்சிகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளதாகவும், ஏனைய பாடங்களுக்கான பயிற்சி நெறிகள் பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

இவர்களுக்கான அனுமதிகள் பற்றிய விபரங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் எனவும் இதுதொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கும் கூட்டம் கல்வி அமைச்சில் இன்று நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் வெளியிட்டுள்ள பொதுச் செயலாளர் இவ்வாசிரிய உதவியாளர்களுக்கான பயிற்சிகள் தாமதமாகும் என பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன என்றும் விரைவாக பயிற்சிகளை ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடமும் எடுத்துக்கூறியதாகத் தெரிவித்துள்ளார்.




யாழ். றோட்டறிக் கழக அனுசரணையுடன் கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம் கொக்குவில் மாலதி முன்பள்ளியில் மாணவர்களுக்கான காலணிகளை வழங்கியது. நிகழ்வில் றெட்டேரியன் பஞ்சலிங்கம் அவர்கள் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ். றோட்டரிக் கழக தலைவர் சங்கர் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலம். (54)

# இறைச்சி விற்பனையில் வரும் இலாபம் வேண்டும் தொடரும் 'காளைமாட்டு' வழக்கு

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய இன காளைமாடு சம்பந்தமான வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இருதரப்பு சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிபதி எதிர்வரும் 2 ஆம் திகதி புதன் கிழமைக்கு வழக்கினை ஒத்தி வைத்தார்.

காளைமாட்டு விடயம் தொடர்பான வழக்கினை ஆராய்ந்த போது மாடு வெட்டுவதைத் தடைசெய்யப்பட்டிருந்த வேளை காளைமாட்டினைக் கொள்வனவு செய்த நபர் கடந்த 17 ஆம் திகதி இணக்கக் கட்டளை மனு ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

அக்கட்டளை மனுவில் மாட்டின் பாதுகாப்புச் செல்வு, பராமரிப்புச் செலவு, இறைச்சிக்காக வெட்டப்படாமையினால் ஏற்பட்ட நட்டம் போன்ற விடயங்களை நீதிமன்றத்தின் கவனத்திற்கு விடுத்துள்ளார்.

அந்த அடிப்படையில் மொத்தச் செலவாக 3 இலட்சத்து ஐந்தாயிரத்து என்னூறு ரூபா செலவாகவும், இறைச்சிக்காக வெட்டப்பட்டிருந்தால் 800 கிலோ இறைச்சியும் 500 ரூபா வீதம் 4 இலட்சம் கிடைக்கப்பெற்றிருந்தால் 2 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா இலாபம் கிடைத்திருக்கும் எனவே தனக்குக் கிடைக்கப்பெறும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி தருமாறு சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் சார்பில் ஆஜராகிய நுர்மான் சட்டத்தரணி தெரிவித்தார்.

எதிர்த்தரப்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி இ.த.விக்னராஜா மன்றில் இவ்விடயம் தொடர்பாக மறுபரிசீலனை செய்து சமூகமான தீர்வு பெற்றுத் தருமாறு கேட்டதிற்கு இணங்க யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா வழக்கினை ஒத்திவைத்தார். (எஸ்)

# சம்புநாத ஈஸ்வரர் ஆலய கும்பாபிஷேக மணவாளக்கோல விழா

திருவடி நிலைக்கு அண்மையில் உள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற சோழியபுரம் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வர கோவிலில் நேற்று முன்தினம் சங்காபிஷேகம் நடைபெற்றது. வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குரு சிவசிறி சு.சுந்தரராருக் குருக்கள் இந்த சங்காபிஷேகம் கிரியைகளை நிறைவேற்றினார். ஆதின கர்த்தா அருள்மிகு நரசிங்கசித்தர் சுவாமி த்லையில் இந்த சங்காபிஷேகம் 09.00 மணியளவில் ஆரம்பமாகியது. தொடந்து மகேஸ்வர பூசையும் நடைபெற்றது. இதில் சாந்தை, சுழிபுரம், பனிப்புலம் கிராமத்து பெருந்திரளான அடியார்கள் வழிபாடுகளில் பங்கு பற்றினர்.

மகிழ்ச்சி என்பது நல்ல ஆரோக்கியமும் குறைந்த ஞாபக சக்தியையும்விட வேறொன்றுமில்லை.
- ஆல்பர்ட் ஸ்வேசர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## யாழ்ப்பாணத்தில் மேதின அம்பலம்!

நேற்று யாழ்நகர் மேதினப் பேரணிகளால் நிறைந்தது என்றுதான் சொல்ல வேண்டும். வீதிகளில் இந்த ஊர்வலங்களைத் தவிர வேறு நடமாட்டங்களே இல்லை என்னுமளவுக்கு பேரணிகள் நீண்டிருந்தன. அதிலும் யாழ்ப்பாணம் எதிர்பார்த்திராத பெரும் மக்கள் வெள்ளத்தை ஈபிடிபியின் பேரணியிலும் கூட்டத்திலும் காணமுடிந்தது.

யாழ் மாநகர திடலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டத்திற்கு குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். அதேபோல குருநகர் சென்.றோக் மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்க் கட்சிகளின் மேதினக் கூட்டத்தில் தென்னிலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து வந்திருந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் நிறைந்திருந்தனர்.

மாநகர திடலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கொடிகளுக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் படங்கள், பதாகைகளுக்கும் நடுவே பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்களின் தலைகளே தெரிந்தன. சென்.றோக் மைதானத்தில் சுற்றிவர நிரம்பிய பச்சைக் கொடிகளுக்கும், யானைச் சின்னங்களுக்கும், சிங்களத்தில் எழுதப்பட்ட பதாகைகளுக்கும் நடுவே சிங்கள மக்களின் தலைகளே முழுவதுமாகத் தென்பட்டன.

தென்னிலங்கையிலிருந்து நூற்றுக்கணக்கான பஸ்களில் "அப்பிட்ட ஒண ஆண்டுவ" என்ற கோஷங்களோடும் பச்சை நிறத் தொப்பிகளோடும் வந்திறங்கிய மக்களே யாழ் வீதியில் ஊர்வலமாகச் சென்றார்கள். மேடையில் பேசியவர்களும் "ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான மேதினக் கூட்டத்திற்கு இலங்கைத் திருநாட்டின் எல்லாப் பாகங்களிலுமிருந்து திரண்டு வந்திருக்கும் மக்களே" என்றுதான் வரவேற்றுக் கொண்டிருந்தார்கள்.

இந்த மேதினக் கூட்டத்திற்கான ஆரம்ப ஏற்பாட்டுப் பேச்சு வார்த்தைகளின் போது, யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையிலேயே நடக்க வேண்டும் என்று, அரசாங்கத்துடன் பேச்சு நடத்தும் பாணியிலேயே கூட்டமைப்பு ஐ.தே.க வுடன் விடாக்கொண்டனாகப் பேசியிருந்ததாகச் செய்திகள் வந்திருந்தது.

ஆனால், நேற்று அது ஐ.தே.க வின் மேதினக் கூட்டமாகவே நடந்தது. யாழ்ப்பாணத்தைச் சிங்களக் கட்சிக்குத் தாரைவார்த்து விட்டார்களே என்று தமிழரசுக் கட்சிப் பெரியவர் ஒருவர் மைதானத்திற்கு வெளியே மணல் குவியலின் மேல் அமர்ந்து சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தார். நம் நூல் நிலையத்தை எரித்தவர்களுக்கு நாமே ஆரத்தி எடுத்து மேடையேற்றிவிட்டு நம்மாட்கள் கண்ணுக்குத் தெரியாமல் ஓரமாக நிற்கிறார்கள். இனி, மக்களிடம் என்னத்தைச் சொல்லப் போகிறோம்? என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதற்கிணங்க, மேடையில் ரணில் பேச்சை ஆரம்பிக்கும் போது, "நாங்கள் யுத்தம் செய்யாமலே யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டோம்" என்றுதான் ஆரம்பித்தார். "ஜயவேவா" முழக்கத்துடன் பச்சைக் கொடிகள் ஆமோதித்து அசைவதை, மற்றும் சமயங்களில் தமிழ் மக்களிடம் வந்து சிங்கள எதிர்ப்பு முழக்கமிடும் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் மேடையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேதினத்தின் சாக்கில், ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு யாழ்ப்பாணத்தைத் திறந்து நிலபாவாடை விரிக்கலாம் என்றால், தேர்தல் என்று வரும் போது ஏன் சிங்களவனுக்கா உங்கள் வாக்கு என்று இனவாதம் பேசவேண்டும்? நூலக எரிப்பையும், சிங்களக் குடியேற்றத்தையும், தமிழ் மக்கள் மீது போர் தொடுத்ததையும் சொல்லி உணர்ச்சிகர வாக்குக் கேட்பவர்கள், அது அத்தனையையும் செய்த முன்னோடிகளை எப்படி யாழ்ப்பாணத்திற்கு அழைத்துக் குலவ முடிகிறது?

- ஆசிரியர்

# வடமாகாண கல்வித்தரம் வீழ்ச்சியடைய போதிய வசதிகள் இன்மையே காரணம்

## - பேராசிரியர் சிவநாதன் தெரிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் கல்வி நடவடிக்கைகளுக்கு போதியளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையே வடமாகாணம் கல்வியில பின்னடைவதற்குக் காரணமென யாழ்பல்கலைக்கழக பொருளியல துறை பேராசிரியர் ப.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் வசதிகளில் பல் வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அத்துடன் வன்னிப் பிரதேசத்தில் மாணவர்கள் வீடுகளில் கல்வி கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள் இல்லாமல் உள்ளனர்.

மாணவர் மத்தியில் புதிதாக அதிகரித்துவரும் கைத்தொலைபேசிப்பாவனை, நவீன தொழில் நுட்பத் தொடர்பாடல் வசதிகள், குறிப்பாக இணையத்தள பாவனையில் கொண்டிருக்கின்ற ஆர்வம் மற்றும் களியாட்டச் செயற்பாடுகளில் அக்கறை பெருகுகின்றமை என்பனவும் மாணவர்கள் மத்தியில் கல்வி நாட்டம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்று பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமையைப் போக்குவதற்குப் பல்வேறு மட்டங்களிலும் விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும். அதில் ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமாக அமைய வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நெடுந்தீவு சிறுமி படுகொலை; சந்தேக நபர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் படுகொலை செய்யப்பட்ட யேசுதாஸன் லக்சினி கொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபரை மே மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எம். மகேந்திரராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், மேலதிக சாட்சியம் பதிவு செய்யப்பட இருந்த போது கடற்கொந்தளிப்புக் காரணமாக நெடுந்தீவுப் பொலிஸார் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கவில்லை.

அதனால் சாட்சியம் பதிவு செய்வதற்காகவும், விசாரணைக்காகவும், சந்தேக நபரை தொடர் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை. பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் சட்டத்தரணி எஸ். செலஸ்ரின் ஆஜராகினார். (எஸ்)

## மாற்று ஆற்றலுடையவர்களுக்கு அட்டை வழங்கும் நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

சமூக சேவைகள் திணைக்களத்தால் மாற்று ஆற்றல் உடையோரை பதிவு செய்தலும், நல நோன்பு அட்டை வழங்குதல் நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு வருகைதரக்கூடிய அனைத்து மாற்று ஆற்றல் உடையோர்கள், வருகைதர இயலாத மாற்று ஆற்றல் உடையோர்கள் அவர்களின் விபரங்களைத் தரக்கூடிய உறவினர்கள் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வருகை தரும்போது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் சிகிச்சைக்கான கிளினிக் அட்டைகள் என்பவற்றை எடுத்துவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (104)

## சட்டவிரோத பிரசவம் பார்த்த இருவர் பிணையில் விடுதலை

(திருநெல்வேலி)

சட்ட விரோதமான முறையில் கர்ப்பிணித் தாய் ஒருவருக்கு பிரசவம் பார்த்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவர் நேற்று முன்தினம் யாழ்.நீதவானால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம்-பலாலி வீதியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு வயிற்றுக்குள் இருந்த சிசு இறந்திருந்தது. அந்தப் பெண்ணின் பிரசவத்துக்கு இவர்கள் உதவியதாக இவர்கள் மீது யாழ்.பொலிஸாரினால் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

வீட்டில் இடம்பெற்ற இப் பிரசவத்திற்குப் பின்னர் பெண்ணுக்கு ஏற்பட்ட அதிக இரத்தப்பெருக்குக் காரணமாக அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சட்டவைத்திய அதிகாரி யாழ். பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பிரசவித்த பெண் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். சிசு இறந்த நிலையில் பிறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணுக்குப்பிரசவம் பார்த்த ஆண், பெண் ஆகிய இருவரும் தலைமறைவானார்கள். சில நாட்கள் கழிந்து அவ்விருவரும் நீதிமன்றில் சரணடைந்தார்கள். இருவரும் 35 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராஜா சந்தேக நபர்கள் இருவரையும் தலா 10ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், ஒரு இலட்சம் ரூபாவுக்கான இரண்டு ஆள்பிணையிலும் அவர்களில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருக்க வேண்டும் என்னும் நிபந்தனையின் பேரிலும் விடுவிக்கப்பட்டனர்.

பிரசவித்த பெண் மூன்று பெண் பிள்ளைகளின் தாய் எனவும், இரண்டு வருடங்களுக்கு முன்னர் கணவனை விட்டுப்பிரிந்திருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

## இன, மத பேதமின்றிய ஆட்சி எதிர்காலத்தில் அமைக்கப்படும்

### சஜித் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

"இன, மத பேதங்களிலில்லாமல் நாட்டிலுள்ள சகலருக்கும் நன்மை அளிக்கும் விதத்திலான ஆட்சியை எதிர்காலத்தில் நான் அமைப்பேன்என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நீர்கொழும்பு-கட்டுவ பிரான்ஸிஸ் ஸாலிஸ் தேவாலய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சஜித் பிரேமதாச,

யுத்தத்தின் பின்னர் எமது நாடு பாரிய அபிவிருத்தியை அடையக்கூடிய வாய்ப்பு இருந் தது. அதனை நாங்கள் இழந்திருக்கின்றோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி 8.3 சதவீதம் என்று கூறப்படுகின்றது.

இது ஒவ்வொருவருக்கும் அவர்களது பொருளாதார நிலையையும் மற்றும் வாழ்க்கைத் தரத்தையும் ஒப்பிடுகையில் புரிகிறதா? என்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

எமது நாடு பாதாளத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆட்சியில் உள்ளவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும், அடியாட்களுக்குமே நன்மை பயக்கும் விதத்தில் ஆட்சி நடத்தப்படுகிறது.

நிலத்துடனும் கடலுடனும் போட்டியிட்டு வாழ்கை நடத்தக்கூடிய ஏழை மக்களுக்கு பொருளாதார அபிவிருத்திகளின் நன்மை போய்ச் சேர வேண்டும். நாட்டிலுள்ள 2 கோடி மக்களுக்கும் நன்மை தரக்கூடிய விதத்தில் ஆட்சி நடத்தப்பட வேண்டும்.

எமது நாட்டின் தேசிய வருமானத்தில் 50 சதவீதத்தை 20 சதவீதமாக வசதி படைத்தவர்கள் அனுபவிக்கின்றனர். 4 சத வீதத்தையே ஏழை மக்கள் அனுபவிக்கின்றனர் என்று ஆய்வொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது எனத் தெரிவித்தார்.



# பாடசாலை மாணவர்கள் கணினியை கற்றலுக்காகப் பயன்படுத்த வேண்டும்

## வடமாகாண கல்விப் பணிப்பாளர்

(யாழ்.நிருபர்)

பெற்றோர் தமது பிள்ளைகளை சிறுவயதில் இருந்தே ஆனமீக ஒழுக்க நெறிகளில் வழிப்படுத்த வேண்டும். தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள், சினிமாப்படங்கள் பார்ப்பதையும், கைத்தொலைபேசி பாவிப்பதையும் அனுமதிக்காது சிறுபிள்ளைகளை ஆலய வழிபாட்டிலும் ஆன்மீகச் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்த வேண்டும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காரை கிட்ஸ்பார்க் சிறுவர் முன்பள்ளியின் ஆண்டு விழாவிலும் கலை நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தொழில்நுட்ப சாதனங்கள் கற்றலுக்காக மட்டும் பயன்படுத்தப்படுவதில் தவறுகள் இல்லை. அந்த வகையில் பிள்ளைகள் கணினியை கற்றலுக்காகப் பயன்படுத்த வேண்டும். அவர்களிடம் இயல்பாக மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களைக் கணினி மூலம் வெளிக்கொண்டு வர முடியும்.

ஆங்கில அறிவும் கணினிப் பாவனையும் இல்லாவிட்டால் எதிர்காலத்தில் சர்வதேச சவாலகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் போய்விடும். பல்வேறு தேவைகளையும் கணினி ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். எனவே சிறுவயதில் இருந்தே பிள்ளைகள் கணினியைப் பாவிக்க வழிப்படுத்த வேண்டும்.

மேலும் சிறுவயதில் இருந்தே பிள்ளைகளிடம் இருக்கின்ற கலைத்திறன்களையும் வளர்த்தெடுப்பதன் மூலம் அவர்களை கிராமத் தலைவர்களாக வீட்டுக்குப் பொருத்தமானவர்களாக, சமூகத்துக்குப் பொருத்த மானவர்களாக உருவாக்க முடியும்.

பெற்றோர், பிள்ளைகளின் கல்விக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு சிறுவயதில் இருந்தே போஷாக்கான உணவுகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். கல்விக்காக முதலீடு செய்வதற்குப் பெற்றோர் பின்நிற்கக் கூடாது. அரசாங்கம் பாடசாலைக் கல்விக்காகக் கூடுதலான நிதியினை ஒதுக்கீடு செய்து வருகிறது. எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோரும் பெருமளவில் ஊக்கமளிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், சிறார்களுக்கான பரிசில்களையும், பதக்கங்களையும் வழங்கினர். முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (10)

# மாங்குளம் பொதுச்சந்தையை துப்புரவாக்கும் செயற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - மாங்குளம் பிரதேச மக்களினால் மாங்குளம பொதுச்சந்தைப் பகுதிகளில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் பற்றைக்காடாக இருந்த பொதுச் சந்தைப் பகுதியை வெட்டித் துப்புரவாக்கும் பணியில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த நிலையில இப்பொதுச் சந்தை காணப்பட்டது. எனினும் மக்கள் மீள்குடியேறியதை அடுத்து அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நீண்ட தூரம் கொண்ட மல்லாவி நகர்ச் சந்தைக்குச் செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் போருக்குப் பின்னரான மாங்குளநகர் அபிவிருத்தியடைந்து வருவதால் இச்சந்தையைத் துப்புரவாக்குவதற்கான நடவடிக்கைகளில் 50 இற்கும் மேற்பட்ட மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சந்தையை மீளப்புனரமைக்க புதுக்குடியிருப்புப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்கின்றனர். (143)

## வெளிவாரிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழ வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சை அலகினால் இசைமாணி மற்றும் நடனமாணி முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில 100 ரூபாவைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ்.பல்கலைக்கழம் என்ற தபாற் கட்டளையை சுய முகவரியிட்டு 40 ரூபா முத்திரையொட்டப்பட்ட தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்.பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

## அபராதம் விதிப்பு

யாழ்.நகரப் பகுதியில் இருபத்தொரு வயதிற்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த நான்கு வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மதுவரித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது இந்த நான்கு வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி கணேசராசா மேற்படி அபராதத்தை செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

◆ ◆ ◆ ◆

யாழ்.நகர்ப் பகுதியில் சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த 3 நபர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மதுவரித் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் யாழ்.நீதிமன்றத்தால் மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (54)

# முல்லைத்தீவு கடற்பகுதியில் டைனமற் மீன்பிடி நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பிரதேச கடற்பரப்பில் தொடர்ந்து தடை செய்யப்பட்ட டைனமற் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலையைச் சேர்ந்த புல்மோட்டை மீனவர்களே இவ்வாறு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் எமது கடற்பகுதி மீன் வளம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நாம் வாழ்வாதார ரீதியில் நஷ்டத்தை எதிர்நோக்குவதாகவும் பலமுறை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீனவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (04)

# 2500 மாணவர்களுக்கு பரீட்சை நோக்கிலமைந்த செயலமர்வு; நிதி மோசடிகள் எதுவும் இல்லை

## விளக்குகிறார் கிளி.வலய கணக்காளர்

(கிளிநொச்சி)

பூநகரி மகா வித்தியாலயத்தில் எதுவிதமான நிதிமோசடியும் இடம் பெறவில்லை என கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் கே.சந்திரகுமார் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலயக் கல்வி அலுவலகத்தினால் குறித்த வளவாளர்களுக்கு வழங்குவதற்கென பூநகரி மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட குறிப்பிட்டளவு நிதி பூரணமாக உரியவர்களுக்கே உரிய அளவுகளில் வழங்கப்பட்டுள்ளது.

நூற்றும் மேற்பட்ட பாடசாலைகளைக் கொண்ட ஆசிரியர் பற்றாக் குறையுடைய வடமாகாணத்தில் மிகப்பெரியதொரு கல்வி வலயத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் கல்வி வளர்ச்சிக்கென பல பணிகளை சேவை நோக்காக ஆற்றிவரும் கல்வியியலாளர்களின் மகத்தானதொரு பணிகளில் ஒன்றாகக் கடந்த ஆண்டிறுதியில் (11.10.2011 முதல் 12.11.2011 ஆம் திகதி வரை) 2500 மாணவர்களின் பரீட்சை நோக்கிலமைந்த செயலமர்வை வேள்ட் விசன நிறுவனத்தின் சிறியளவிலான நிதியுதவியுடன் நடத்தப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இச்செயலமர்வை நடத்தி முடிக்கப் பல்வேறு இடர்கள், நிதிப் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் மாணவர்களின் கல்வி நலனை மட்டும் நோக்காகக் கொண்டு சிறப்புற இப்பணியை நிறைவேற்றியிருந்தார்கள். அவ்வளவாளர்களைக் கௌரவிக்கும் நோக்கில் கிடைத்த சிறியளவிலான நிதியை அவர்களின் பங்குகொண்ட மணித்தியால அடிப்படையில் வழங்குவது என்ற முடிவிற்கமைவாகவே அனைவருக்கும் பாரபட்சமின்றி குறித்த நிதி பிரித்தளிக்கப்பட்டது. இதன்போது மிகக்குறுகியளவு பங்குபற்றுதல் வழங்கியவர்களுக்கே மிகக்குறுகியளவு நிதிப்பயன் கிடைத்தது. எனினும் இச்செயலமர்வுக்கு வேள்ட் விசன் நிறுவனம் வழங்கியபங்களிப்பு காத்திரமானது.

எனவே குறித்த நிதிப் பிரயோகம் அரச நிதிப்பிரமாணத்திற்கமையவே நிகழ்த்தப்பட்டுள்ளது. எதுவித மோசடியும் நிகழ்த்தப்படவில்லை சேவை நோக்கம் கொண்ட அனைத்து கல்வியியலாளர்களும் மேலும் பல பணிகளையாற்றத் தயாரா கவே உள்ளனர். அத்துடன் கல்விப் பணியைத் தமது இலாப நோக்கில் மலிந்த தாக்குபவர்களின் பார்வையிலேயே இச்சிறப்பான கல்விப்பணி செய்தியாக அமைந்துள்ளமை வருத்தமளிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறுமலர்ச்சி மன்றத்தின் பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது கடந்த வருடம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த ஊர் மாணவர்களுக்கு இந்தப் பரிசில் வழங்கப்பட்டது. ஊரில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்குடனே இந்த நிகழ்வு நடைபெற்றது.

கடந்த வருடம் (2011) ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) தரத்தில் சித்தியடைந்த பத்து மாணவர்களுக்கு இந்தப் பரிசில்கள் வழங்கப்பட்டது. இதில் சித்திய டைந்த மாணவர்களுக்கு சிறந்த கேம்பிரிஜ் அகராதியும், அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சங்கானை இலங்கை வங்கி முகாமையாளர் அழ.பகீரதன் கூறியபோது, கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் சாதாரண தரத்தில் சித்திய டைந்த மாணவர்களின் விகிதம் குறைந்து காணப்படுவதாகவும் கூறினார். பரிசில் வழங்கல் நிகழ்வுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. சிறந்த கலை நிகழ்ச்சிகளும் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை - சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலய மகாகும்பா பிஷேகம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை எண்ணெயக் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.





கைதடி சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு விழா அண்மையில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அருள்வேல் செல்வன் மங்கள விளக்கேற்றுவதையும், நிலைய அங்கத்தவர்களின் கலை நிகழ்வையும் காணலாம்.

# ஆற்றலுள்ளவர்களை வாழும்போதே வாழ்த்துகின்ற பண்பு வேண்டும்

## – தமிழ் நேசன் அடிகளார் –

(மன்னார்)

நம் மத்தியில் சாதனை புரியும் திறமைசாலிகளை, ஆற்றல் வாய்ந்தவர்களை நாம் வாழ்த்தவும் பாராட்டவும் காலம் தாழ்த்தக்கூடாது. ஒருவர் இறந்த பின்னர்தான் அவரின் சிறப்புக்களை சொல்லிப் பாராட்டுகின்ற நமது பழக்கம் வழக்கமமாற வேண்டும் அவர்களை வாழும்போதே நாம் வாழ்த்த வேண்டும் என மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநரும், 'மன்னா' பத்திரிகையின் ஆசிரியரும், மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.

அண்மையில் நானாட்டான் பிரதேசத்தில் உள்ள சூரியகட்டைக்காடு என்னும் கிராமத்தில் இடம்பெற்ற மறைக்கல்வி பற்றிய இறுவட்டு வெளியீட்டு நிகழ்வின்போது அக்கிராமத்தைச் சேர்ந்த கலாபூசணம் விருது பெற்ற செபமாலை அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்து உரையாற்றம்போதே அடிகளார் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், சாதாரணமாக ஒருவரை நாம் வாழ்த்தும்போது அவர் வளர்கின்றார் என்பது அடிபடையான ஓர் உளவியல் உண்மையாகும். இதை நாம் பெரும்பாலும் உணர்வதில்லை. வாழ்த்துக்குரியவர்களை வாழ்த்துவதாலோ அல்லது பாராட்டுவதாலோ நாம் எதையும் இழந்து விடுவதில்லை. ஆனால் வாழ்த்தப்படுபவர்கள் அடையும் மகிழ்ச்சி, மலர்ச்சி, வளர்ச்சி அளவிடமுடியாதது. எனவே ஒருவர் இறந்தபின்னர் அல்ல அவர் வாழும்போதே அவரை வாழ்த்துவோம் எனத்தெரிவித்தார்.

# யாழ். வாசிகள் இந்தியாவில் கைது

இலங்கையில் இருந்து ஆட்கடத்தல்காரர்களால் அழைத்துவரப் பட்டவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் இலங்கையைச் சேர்ந்த இருவர் கொல்லம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர் தனபாலசிங்கம் மற்றும் சிறிதாசன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரையும், காவநாட் நகர மக்கள் விசாரித்த போது, பதில் எதனையும் உரியமுறையில் வழங்காததை அடுத்து அவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். இதனால் தனபாலசிங்கம் பலத்த காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இந்தநிலையில் விசாரணையின் போது இருவரும் தாம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வெளிநாடு ஒன்றுக்கு செல்வதற்காகவே இந்தியாவுக்கு வந்ததாகவும் தெரிவித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



சிறுப்பிட்டி தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் யூ.ஆர் பௌண்டேசன் நிறுவனத்தினால வழங்கப்பட்டது. இதில் நிறுவனத்தலைவர் க.செவ்வேள் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைப்பதனை காணலாம்.

# அடிப்படை வசதிகளின்றி சிரமத்துடன் இயங்கும் முன்பள்ளி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவில் இயங்கும் முன்பள்ளி எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி காணப்படுவதாக மக்களால் தெரிவிக்கப் படுகின்றது.

கொக்குத்தொடுவாய் கிராமத்தில் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய 3 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் பொதுவாக ஒரே ஒரு முன் பள்ளியாக இம்முன்பள்ளி செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நிரந்தரக் கட்டடமோ, தளபாட வசதிகள், கற்றலுக்கான உபகரணங்களோ எதுவுமின்றி பின்தங்கிய நிலையில் சிரார்களுக்கான கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

25 சிறார்களே இம் முன்பள்ளியில் கல்வி கற்று வரும் நிலையில் மழை காலங்களில் கல்வியைத் தொடரமுடியாதுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மாணவர்களின் கல்விச் செயற் பாடுகளைக் கருத்திற் கொண்டு அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தருமாறு மக்களும் முன்பள்ளிச் சமூகமும் கேட்டுக் கொள்கின்றனர்.

(04)

# செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6, 7, 8, 9 ஆகிய வகுப்புகளுக்கு நடனம், சித்திரம் கற்பிக்கும் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் குறித்த ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(109)

# முரசின் இன்றைய பலன்

(02.05.2012 -புதன்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 20 ஆம் திகதி. ஏகாதசி மாலை 6.41 வரை.
நட்சத்திரம் பூரம் பிற்பகல் 12.05 வரை. அமிர்தயோகம். ஏகாதசி விரதம்.
இராகுகாலம் 11.56 - 1.26 வரை. சுபநேரம் 4.26 - 5.56 வரை.
எமகண்டம் 7.26 - 8.56 வரை. குளிகைகாலம் 10.26 - 11.56 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வாகன சுகம், அயலவருடன் எச்சரிக்கை, அவசரம் கூடாது, குடும்ப அன்னியோன்யம். |
| ரிஷபம் | தொழில் சிறப்பு, மனதில் புத்துணர்ச்சி, திருமணப் பேச்சு, கணவன் மனைவி அந்நியோன்யம். |
| மிதுனம் | காரியானுகூலம், சகோதரர் சச்சரவு, புத்திரர்களால் திருப்தி, வீண்செலவுகள். |
| கடகம் | இருப்பிட வசதி, பயணங்களைத்தவிர்க்கவும், மருத்துவச் செலவு அதிகரிப்பு, மனச்சஞ்சலம். |
| சிம்மம் | மனதில் உற்சாகம், பொன்பொருள் சேரும், நட்புகள்நாழ வரும், சிறப்பான குடும்ப வாழ்க்கை. |
| கன்னி | ஸ்திரிகளால் நன்மை, பிணை போவதில் கவனம், குடும்பத்தில் அன்னியோன்யம். |
| துலாம் | ஞாபக மறதி, பணியில் அனுசரி, போட்டியில் ஏமாற்றம், குடும்பத்தில் கருத்துவேறுபாடு. |
| விருச்சிகம் | வர்த்தகத்தில் ஆதாயம், மருத்துவச் செலவுகள், எதிர்பாராத அலைச்சல், நிதானம் வேண்டும். |
| தனுசு | வாகன சுகம், வீண்பொருளுக்கு நல்ல விலை, கல்வியில் சாதனை, நினைத்தது கைகூடும். |
| மகரம் | முன்தினம் போல் கவனம் தேவை, தொழிலில முன்னேற்றம், திடீர் தனவரவு, மந்த வருவாய். |
| கும்பம் | கூட்டு முயற்சி, பணியில் திருப்தி, எதிர்பாராத பயணம், குடும்பத்தில் சகலவித மகிழ்ச்சி. |
| மீனம் | புகழ் வந்து சேரும், கௌரவமான பதவிகள், ஸ்தல வழிபாடுகள், தொலைதூர இடமாற்றம். |

# சுகாதார சீர்கேடு

(மல்லாவி)

மாங்குளம் பகுதியில் குப்பைக் கழிவுகள் தேங்கிய நிலையில் கவனிப்பாரற்றுக் காணப்படுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னர் திருமுறிகண்டி, உப பிரதேச சபை அண்மைக் காலமாக இக்குப்பைகளை அகற்றி வந்த நிலையில் சில நாட்களாக குப்பைகள் அகற்றப் படாததாலேயே தேங்கிக் காணப் படுவதாக மக்கள் தெரிவிககின் றனர்.

இதனால் அயலிலுள்ள மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும், இவற்றை அகற்றுவதற்கு உரியவர்கள் நடவடிக் கையெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

(143)


# நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தலைவராக நா.நகேஸ்வரன், உபதலைவராக கி.சிவசாமி, செயலாளராக ஏ.பெனடிக்ற் அன்ரனி, பொருளாளராக க.நடராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# பரமர் சங்கமம்



'கோதுமை மாவின் விலையில் அதிகரிப்பு மற்றொரு தடவையும் அரங்கேறியுள்ளது. இதனால் பாண் முதற் கொண்ட கோதுமை மாவு உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்றும் செய்திகள் சாதாரணிகளின் வயிற்றைக் கலக்கி விட்டுள்ளது.

சமீபத்தில் எரிபொருள் விலையேற்றத்தைத் தொட்டு பாண் மற்றும் சிற்றுண்டிகளின் விலைகள் அதிகரித்ததால் ஏலவே நுகர்ந்த அளவுகளில் மக்கள் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கையில் கோதுமை மாவின் விலை காரணமாக மீண்டுமொரு விலை ஏற்றத்தை பாண் போன்ற சிற்றுண்டி வகைகளுக்கு ஏற்படுத்தினால் பட்டினிச் சாவுகளுக்கே முகம் கொடுக்க நேரும்.

அதிலும் மூன்று வேளைகளிலும் கோதுமை மாப்பண்டங்களை உணவாகக் கொள்கின்ற மலையக மக்கள் பாடு சொல்லவும் வேண்டுமா?

ஏனைய பிரதேசங்களிலும் இப்பொழுது கோதுமை மாப் பண்டங்களான புட்டு, இடியப்பம், றொட்டி, பாண் போன்றவற்றையே அதிகப்படியாக உணவுக்கு எடுத்துக் கொள்ளவும் பழக்கப்பட்டுள்ளதோர் நிலைமை தோன்றியுள்ளது.

அரிசி மாவில் புட்டு, இடியப்பம் செய்து மக்கள் உணவாகக் கொண்டு வாழ்ந்த ஐம்பதுகளுக்கு முன்பாக இந்த கோதுமை மாவைப் பசை செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

அக்காலங்களில் கோதுமையை நஞ்சுப்பொருளாகவே மக்கள் புறக்கணித்து வந்த காலங்களும் இருந்தன. அதன் பின்பாக வெதுப்பகங்களை நிறுவி பாண், பணிஸ் மற்றும் பிஸ்கட் வகைகளை உற்பத்தி செய்து சிறுகச் சிறுக பாவனைக்கு விட்டு வளர்ச்சி கண்ட நிலையே இன்றைய நிலைமை உருவாகக் காரணமானது.

இம்முறையும் விவசாயம் வன்னி போன்ற அழிவுகளுக்கு உள்ளான பிரதேசங்களில் அமோக விளைச்சல்களைப் பெற்றும் மக்கள் அரிசியை இடித்துப் பதப்படுத்தி செய்யும் உப உணவுப் பொருட்களை வீடுகளில் ஆக்கி உண்பதற்கு முன்வராதது ஏன்?

எனினும் கோதுமை மாவில் அவிக்கப்பட்ட வெள்ளைப்புட்டை முதன் முதலாக ருசி பார்த்த எம்மவர்கள் அதனால் பல்வேறு வகையான பண்டங்களை எந்த மாச்சலும் படாமல் ஆக்கி உண்டு பழகி விட்டதன் தாற்பரியமே இது.

எமது கால்களில் நாங்கள் நிற்காமல் இன்னொருவனின் கால்களில் நிற்கின்ற வரலாறு இனியும் நீடித்தால் இது போன்ற இன்னமும் பல இக்கட்டுக்குள் வாழ நேருமென்றதை இனியாவது உணர்வார்களா சொல்லுங்க பாப்பம்....

# இலங்கை வெற்றி

(கோலாலம்பூர்)

மலேசியாவில் நடைபெற்ற இலங்கை- மலேசிய அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணி 6-0 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது.

மலேசியாவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள இலங்கை அணி, மலேசிய அணியுடன் கடந்த சனிக்கிழமை மோதியது. இப்போட்டியில் 6-0 கோல்களால் மலேசிய அணியை இலங்கை வென்றது. இது மிகச் சிறப்பான வெற்றிஎனஇலங்கைஅணித் தலைவர் தெரிவித்தார்.



# நான் அரசியல்வாதி இல்லை!

நான் அரசியல்வாதி அல்ல. என்றும், கிரிக்கெட்டிற்கு ஆற்றிய சேவைக்காக ராஜ்யசபா எம்.பி. பதவி ஒரு மரியாதை நிமித்தமாக வழங்கப்பட்டது என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். வாழ்க்கையில் ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்கும் கல்வி மிக அவசியமானது. மனித முன்னேற்றத்திற்கு எந்தவொரு தடைகளையும்வெற்றியாக மாற்றப்பழகவேண்டும். தோல்வியைக்கண்டு துவண்டு விடக்கூடாது. உலக கோப்பை எனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வாகும். நான் அரசியல்வாதி அல்ல. கிரிக்கெட்டிற்கு ஆற்றிய சேவைக்காக ராஜ்யசபா எம்.பி. பதவி ஒரு மரியாதை நிமித்தமாக வழங்கப்பட்டது. இதற்காக கிரிக்கெட்டை நான் ஒதுக்க மாட்டேன். இது என் வாழ்நாளில் ஒரு அங்கம்.

எம்.பி.பதவி ஒரு கிரிக்கெட் ஆட்ட பவுன்சர் -ஐ எதிர்கொள்வது போன்றதென்றாலும் எனக்கு மிகப்பெரிய கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். ராஜ்யசபா எம்.பி. பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்டு உறுதியான பின்னர் முதன் முதலாக நிருபர்களிடம் பேசியபோதே சச்சின் டெண்டுல்கர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# புனேக்கே ஆதரவு


(கொல்கத்தா)

கொல்கத்தா ரைட் ரைடர்ஸ் அணிக்கும் கங்குலி தலைமையிலான புனே அணிக்குமிடையிலான போட்டியில் எந்த அணியை கொல்கத்தா ரசிகர்கள் ஆதரிப்பார்கள் என்ற குழப்பம் தற்போது எழுந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து கங்குலியின் மனைவி டோனா கூறியிருப்பதாவது: பெரும்பாலான ரசிகர்கள் கங்குலியை தான் ஆதரிப்பார்கள். ஈடன் கார்டன் மைதானத்தில் விளையாடுவதால் கங்குலியை ஆதரிப்பார்கள் என்று எனக்குத் தெரியும் என்றார். இந்தப் போட்டிக்கான டிக்கெட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டன.

# விடைபெறுகின்றார் ஜோன் ரைட்

(ஹமிடன்)



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன் ரைட், தனது பதவிக்காலம் நிறைவடைந்ததும் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். வழக்கமான நடவடிக்கைகளின் படி அவருக்கு மேலதிக காலம் வழங்கப்பட எதிர்பார்க்கப்பட்டபோதிலும், தான் பதவியிலிருந்து விலகப்போவதாக அவர் அறிவித் துள்ளார்.

ஜோன் ரைட் இற்கு நியூசிலாந்து கிரிக்கெட் சபை வழங்கிய ஒப்பந்த நீட்சியை மறுத்துள்ள ஜோன் ரைட், மேற்கிந்தியத் தீவுகளுக்கு நியூசிலாந்து அணி கிரிக்கெட் பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாவோடு தனது பதவியிலிருந்து விலகவுள்ளார்.

ஜோன் ரைட் பயிற்றுவிப்பாளராகப் பதவி வகித்த இக்காலப்பகுதியில் நியூசிலாந்து அணி 9 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி, மூன்றில் வெற்றியும், மூன்றில் தோல்வியும், மூன்றில் வெற்றி தோல்வியற்ற முடிவையும் கண்டுள்ளது.

அத்தோடு கடந்த வருடம் இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷில் இடம்பெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளில் நியூசிலாந்து அணி அரையிறுதிப்போட்டிகளுக்கும் தகுதிபெற்றிருந்தது. நியூசிலாந்து கிரிக்கெட் அணிக்கு பயிற்றுவிக்கக் கிடைத்த வாய்ப்பிற்காக நியூசிலாந்து கிரிக்கெட் சபைக்கு நன்றி கூறுவதாகத் தெரிவித்த அவர், நியூசிலாந்தில் பிறந்த தான், நியூசிலாந்து அணிக்கு பயிற்றுவிப்பில் ஈடுபட எப்போதுமே விரும்பியதாகத் தெரிவித்தார்.

ஒப்பந்த நீட்சிக்காக நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்த அவர், விலகுவதற்கான சரியான தருணம் இதுவெனக் கருதுவதாகவும் தெரிவித்தார்.

# விக்கெட் காப்பை டோனி நிறுத்த வேண்டும் என்கிறார் சங்கா

இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி இனிமேல் விக்கெட் காப்பில் ஈடுபடக்கூடாது என இலங்கை அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

டோனியின் கிரிக்கெட் வாழ்வும் முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளது. டெஸ்ட் போட்டிகளில் டோனி விக்கெட் காப்பில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

மகேந்திரசிங் டோனியின் டெஸ்ட் துடுப்பாட்ட சராசரி அவரது உண்மையான திறமையை வெளிப்படுத்துவதில்லை. அணித் தலைவராகவும், துடுப்பாட்ட வீரராகவும், விக்கெட் காப்பாளராகவும் செயற்படுவதன் காரணமாக அவருக்கு இந்த நிலை காணப்படுகிறது. டோனி மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர். அவரது வேலைப்பளு காரணமாக அவரால் துடுப்பெடுத்தாடக்கூடிய அளவுக்கு அவ ரால் விக்கெட் காப்பைச் செய்ய முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

# கொல்கத்தா இலகு வெற்றி

(சென்னை)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடனான லீக் ஆட்டத்தில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் துடுப்பாட் டம் செய்தது.தொடக்க வீரர்களாக பிளஸ்சிஸ், ஹஸி களமிறங்கினர். ஆரம்பம் முதலே சென்னை அணியின் விக்கெட்டுக்கள் விழத் தொடங்கின. இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை சென்னை அணி பெற்றது. இதில் ரெய்னா 44 ஓட்டங்களைப் பெற் றார். கலிஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு ஆடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 19.4ஓவர்கள் நிறை வில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அணித் தலைவர் கௌதம் கம்பீர் அரைச்சதம் கடந்தார். ஆட்டநாயகனாக தாஸ் தெரிவானார்.



# 7ஆவது முறையாக கிண்ணம் வென்ற நடால்

(பார்சிலோனா)

பார்சிலோனா ஓப்பன் ரென்னிஸ் போட்டியின்ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) 7ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார்.

உலகின் 2ஆம் நிலை வீரரான நடால், இறுதிப் போட்டியில் சக வீரரான டேவிட் பெரருடன் மோதினார். நேற்று முன்தினம் இரவு நடந்த விறுவிறுப்பான இந்தப் போட்டியில், நடால் 7:6 (7:1), 7:5 என்ற நேர் செட்களில் கடுமையாகப் போராடி வென்று 7ஆவதுமுறையாக பார்சிலோனா ஓப்பனில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

ரென்னிஸ் வரலாற்றில் இரண்டு வெவ்வேறு தொடர்களில் 7 முறைக்கு மேல் கோப்பை வென்ற முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். சமீபத்தில் நடந்த மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் அவர் உலகின் முதல் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச்சை வீழ்த்தி தொடர்ந்து 8ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

பார்சிலோனா ஓப்பன் இறுதிப் போட்டியில் 4ஆவது முறையாக நடாலுடன்மோதிய பெர்ரர், இந்த முறையும் கோப்பை வெல்ல முடியாமல் ஏமாற்றம் அடைந்தார். இருவரும் மோதிய போட்டிகளில் நடால் 14:4 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறார்.

கிண்ணம் வென்றது மகிழ்ச்சி. அடுத்து ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வதே இலக்கு என வெற்றியின் பின் நடால் தெரிவித்தார்.

# இந்தியாவிற்கு சிறப்பு அனுமதி


லண்டன் ஒலிம்பிக் பளுதூக்குதல் போட்டியில் விளையாட இந்தியாவுக்கு சிறப்பு அனு-மதி கிடைத்துள்ளது. தென் கொரியாவில், சீனியர் ஆசிய பளுதூக்குதல் சம்பியன்ஷிப்ஸ் தொடர் நடந்தது. இதில் இந்தியாவின் சோனியாசானு, 48 கி.கி. எடைப்பிரிவில் வெண்கலம் வென்றார். இத்தொடரின் பெண்கள் பிரிவில் 93 புள்ளிகள் பெற்ற இந்தியா, 4ஆவது இடம் பிடித்தது. ஆண்கள் பிரிவில் 134 புள்ளிகள் பெற்ற இந்தியா, 5ஆவது இடம் பிடித்தது. இதன்மூலம், லண்டன் ஒலிம்பிக் பளுதூக்குதல் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் தலா ஒருவர் விளையாட இந்தியாவுக்குசிறப்பு அனுமதிகிடைத்துள்ளது. சுமார் 12 ஆண்டுகளுக்குப் பின், ஒலிம்பிக் பளுதூக்குதலில் இந்திய வீரர் விளையாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது. முன்னதாக சிட்னியில்(2000) நடந்த ஒலிம்பிக்கில் இந்திய வீரர் தாண்டவ மூர்த்தி முத்து, 56 கி.கி. எடைப்பிரிவில் விளையாடினார். இவர், 16ஆவது இடம் பிடித்தார்.

# பங்களாதேஷிற்கு மிரட்டல்

(கராச்சி)

பங்களாதேஷ் அணி, பாகிஸ்தானில் வந்து விளையாடக்கூடாது என, இ-மெயில் மூலம் மிரட்டல் வந்தது என, பாகிஸ்தானுக்கான பங்களாதேஷ் தூதர் ரோகல் ஆலம் சித்திக் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் மற்றும் ருவென்ரி - 20 போட்டியில் பங்கேற்க, பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் செல்லவிருந்தது. இதற்கு பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் தடை விதித்ததால், தொடர் இரத்தானது. இதுகுறித்து ரோகல் ஆலம் சித்திக் கூறுகையில், பங்களாதேஷ் அணி, பாகிஸ்தானுக்கு வரக் கூடாது என எங்களுக்கு இ-மெயில், கடிதம் மற்றும் குறுந்தகவல்கள் மூலம் மிரட்டல் வந்தது. இதை நிர்வாகிகளுக்குத் தெரிவித்திருந்தேன். இதனால் தொடர் இரத்தானது எங்களுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. எதிர்காலத்தில்பங்களாதேஷ் அணி, பாகிஸ்தானுக்கு செல்லும் என்று நம்புகிறேன் என்றார்.



# 25ஆவது பட்டம் வென்ற ஷரபோவா

ஸ்டட்கர்ட் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனை விக்டோரியா அஸரென்காவுடன் மோதிய அவர் 6:1, 6:4 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையைக் கைப்பற்றினார்.

ஷரபோவா பெறும் 25ஆவது பட்டம் இதுவாகும். அவருக்கு ரூ.60 இலட்சம் ரொக்கப்பரிசுடன் போர்ஸ்போர்ட்ஸ் மொடல் காரும் வழங்கப்பட்டது.

வெற்றியின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஷரபோவா, உண்மையில் மிகச் சிறந்த வெற்றி இது. இதன் மூலம் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்து வரும் போட்டித் தொடர்களில் சிறப்பான முறையில் ஆடி கிண்ணம் வெல்வதே எனது இலக்கு. திருமணம் குறித்து நான் இப்போது சிந்திக்கவில்லை. இன்னும் நிறையப் போட்டிகளில் வெற்றியீட்ட வேண்டும். அடுத்துவரும் லண்டன் ஒலிம்பிக் போட்டியிலேயே எனது முழுக் கவனமும் உள்ளது என்றார்.

# அணியின் ஒற்றுமையே வெற்றிக்குக் காரணம்



(கொக்குவில்)

ஒரு அணியாக ஒன்று பட்டு விளையாடியமையே பாலகிருஷ்ணன் நினைவு வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றக் காரணம் என சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணித் தலைவர் எஸ். சஞ்சயன் தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியினால் நடத்தப்பட்ட லயன் சி. பாலகிருஷ்ணன் நினைவு வெற்றிக் கிண்ண 5 ஓவர் கிரிக்கெட் தொடரில் கிண்ணம் வென்றமை குறித்து கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பலமான துடுப்பாட்ட வரிசையும் நேர்த்தியான பந்துவீச்சும், சிறந்த களத்தடுப்புமே எமது வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. 5 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் நாம் சந்தித்த யாழ். மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய மூன்று அணிகளுக்கு எதிராகவும் 60 ஓட்டங்களுக்கு மேலாகப் பெற்றிருப்பது எவ்வாறு அடித்தாடினோம் என்பதை எடுத்துக்காட்டும். இந்தப் போட்டியிலும் முதல் இரு ஓவர்கள் நிறைவில் 13 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தோம். ஆனால், 3ஆவது ஓவரில் நிரோஜனும், ஜனக்ஷனும் 4 சிக்ஸர், 1 பவுண்டரி உட்பட 29 ஓட்டங்களைப் பெற்றமை திருப்புமுனையாக அமைந்தது. ஒரு அணியாக ஒன்று பட்டு விளையாடியமையே வெற்றிக்குக் காரணம் எனத் தெரிவித்தார். (44)

# இறுதிவரை முன்னேறியது ஆறுதலாக அமைந்தது

(கொக்குவில்)

பாலகிருஷ்ணன் நினைவு வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறியமையே எமக்கு ஓரளவு ஆறுதலாக அமைந்தது என கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் ஜே. ஜனுதாஸ் தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியினால் நடத்தப்பட்ட லயன் சி. பாலகிருஷ்ணன் நினைவு வெற்றிக் கிண்ண 5 ஓவர் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியிடம் தோல்வியுற்றமை குறித்து கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியின் ஒருங்கிணைந்த சிறந்த ஆட்டம் எமது அணியின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. முக்கியமாக அவர்களின் களத்தடுப்பு மிகச் சிறப்பாக இருந்தது. பந்து வீச்சும் நேர்த்தியாக இருந்தது. உதிரிகளைக் கூட குறைவாகவே விட்டுக் கொடுத்தனர்.



எமது அணி துடுப்பாட்டத்தின் போது எதிர்பார்த்த வீரர்கள் எவரும் சிறப்பாக விளையாடவில்லை. இதில் பங்குஜனுக்கு இணையாக ஒரு வீரர் நிலைத்து ஆடியிருந்தால் போட்டியில் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும். துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட சறுக்கலே தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டது. இருப்பினும் இப்போட்டித் தொடரில் எமது அணி இறுதிப் போட்டி வரை முன்னேறியமை எமக்கு ஓரளவு ஆறுதலாக அமைந்தது எனத் தெரிவித்தார். (44)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம் தெல்லிப்பளை மகாஜனா சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி சம்பியனானது. கடந்த 24ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி சிறந்த ஆட்டத் திறனை மகாஜனாக் கல்லூரி அணி வெளிப்படுத்தியது. மகாஜனாக் கல்லூரி வீராங்கனைகளின் ஆட்டத்திற்கு முன்னாள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மண்டியிடவே செய்தது. இறுதியில் 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று மாவட்ட சம்பியனாக தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலய அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

# வென்றது யூனியன் கல்லூரி




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மேசைப்பந்தாட்ட அணியும் விளையாட்டு அவையும் இணைந்து நடத்திய பெண்களுக்கான மேசைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உள்ளக அரங்கில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியில் மூன்று ஒற்றையர்கள் சுற்று இடம்பெறுறன. முதல் ஒற்றையர் சுற்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வி.கல்யாணியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஐ.டென்சிகாவும் மோதிக் கொண்டார்கள்.

மூன்று நேர்ச் சுற்றுக்களையும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஐ.டென்சிகா 11:8, 11:3, 11:9 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் சுற்றில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சிந்துஜாவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எஸ். துஷ்யந்தியும் மோதிக் கொண்டனர்.

இச்சுற்றிலும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சிந்துஜா 11:3, 11:1, 11:6 புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று நேர்ச் சுற்றுக்களையும் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் சுற்றில் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரி.தரணிகாவும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ரி.கீர்த்தனாவும் மோதிக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் முதலாம் இரண்டாம் சுற்றுக்களையும் மற்றும் ஐந்தாம் சுற்றுக்களை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ரி.கீர்த்தனா முறையே 11:9, 11:8, 13:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரி. தரணிகா இரண்டாம் மற்றும் மூனறாம் சுற்றுக்களை முறையே 11:2, 11:7 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றார்.

# வவுனியா மட்ட விளையாட்டு

(வவுனியா)

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் 64ஆவது ஆண்டு நிறைவையொட்டி கழக மற்றும் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

வடக்கு - கிழக்கு வீரர்களுக்கிடையிலான பொதுப் போட்டியாக ஆண்களுக்கான 105 மைல் சைக்கிள் ஓட்டம், நான்கு பேர் கொண்ட 30 நிமிட நேர கரப்பந்தாட்டம் இடம்பெறவுள்ளது.

வவுனியா வடக்கு வலய பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கிடையிலான போட்டிகளாக ஆண்களுக்கான கிரிக்கெட், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், ஆண்களுக்கான கால்பந்தாட்டம், ஆண், பெண்களுக்கான 6 பேர் கொண்ட கரப்பந்தாட்டம் (செற்றப்) மற்றும் 15 மைல் சைக்கிள் ஓட்டம் என்பன இடம்பெறவுள்ளது.

மற்றும் வவுனியா மாவட்ட கழகங்களுக்கிடையிலான போட்டிகளாக ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டம், பெண்களுக்கான 3 மைல் மரதன் ஓட்டம், பெண்களுக்கான 15 மைல் சைக்கிள் ஓட்டம், அணிக்கு ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் என்பன இடம்பெறவுள்ளது.

அத்துடன் பாரம்பரிய விளையாட்டுக்களான சறுக்கு மரம் ஏறுதல், கயிறுழுத்தல், முட்டியுடைத்தல் என்பனவும் இடம்பெறவுள்ளது. வவுனியா புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 0776215297, 0775381742, 0771108423 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்)

# கிண்ணம் வென்றது மல்லாகம் றைனோர்ஸ்

(மல்லாகம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழகம், மல்லாகம் பிரதேச மட்டக் கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற மல்லாகம் பிரிமியர் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மல்லாகம் றைனோர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் றைனோர்ஸ் விளையாட்டுக் கழகமும் ஸ்பைடர்ஸ் விளையாட்டக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் றைனோர்ஸ் விளையாட்டுக்கழகம் 13.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களை பெற்றது.

இவ் அணியில் அஜித் 15, கிரிசன 13 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்பைடர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.ஜிந்தா 4 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் விமல் 3.4 ஓவர்கள் பந்து விசி 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் காந்தசீலன் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கௌசிபன் 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்பைடர்ஸ் விளையாட்டுக்கழகம் 11.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இவ் அணியில் காந்தசீலன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.

றைனோர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுதன் 3.4 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் ரகுநாத் ஒரு ஓவர் பந்து வீசி ஒரு ஓட்டத்திற்கு 2 விக்கெட்டையும் அனுராஜன் 3 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அஜித் 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ரைனோர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அஜித்தும் போட்டிகளின் தொடர் ஆட்டநாயகனாக ஸ்பைடர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த விமலும் தெரிவு செய்யப்பட்டனர். (93)

- அரவிந்தன் கட்டுரையிலிருந்து -

# தமிழகத் தலைவர்களின் வீரமுழக்கங்களை சிங்கள இனவாதமே வரவேற்று மகிழ்கிறது!

**அரசியலில்** எப்பொழுதும் நகைச்சுவையான விசயங்களுக்குக் குறையிருப்பதில்லை. இதற்கென்று ஆட்களுமிருப்பார்கள்.

தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரீ.ஆர். பாலுவும் தாமரைச்செல்வனும் அதன் தலைவர் மு. கருணாநிதியும் தெரிவித்து வரும் விசயங்களைப் பற்றிப் பார்க்கிறோம். சிரிப்பதற்குச் சங்கதிகள் வேண்டுமல்லவா?

கடந்த புதன்கிழமை (25.04.2012) இந்திய நாடாளுமன்றத்தில் பாலு சொன்னார் - "தமிழீழத் தனிநாட்டை உருவாக்குவதற்கு ஐ.நா. வை இந்தியா இணங்கச் செய்ய வேண்டும்" என்று.

தாமரைச்செல்வன் சொன்னார் - "பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்காக இந்தியாவின் உதவியுடன் கட்டப்பட்ட வீடுகள் பல சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைக்கின்றன" என.

கருணாநிதி இன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்லியுள்ளார் "உயிரைத் துறப்பதற்கு முன்னர் ஈழம் மலர்வதைக் காண்பேன்" என்று.

இதற்கு மேல் நாம் அதிகம் விளக்கத் தேவையில்லை. உங்களுக்குச் சிரிப்பு வந்திருக்கும். அல்லது இதெல்லாம் என்ன பெரிய விசயங்கள் என்று நீங்கள் தூக்கிப் போட்டுவிட்டு உங்களுடைய வேலைகளைப் பார்க்கப் போய்விடுவீர்கள்.

ஆனால், இந்தப் பேச்சையெல்லாம் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளும் பெரும்பாலான ஈழத்தமிழ் இணையங்களும் பிரதான செய்திகளாக்கிப் பிரசுரித்து



> **இவர்களைப் பொறுத்தவரையில் இலங்கையின் இனப் பிரச்சினை தீர்க்கப்படவே கூடாது. அது ஒரு சுவையான பண்டமாக - தமது அரசியற் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு எப்போதும் இருக்க வேண்டும்.**

வருகின்றன.

இதற்குத் தனியாக ஆசிரிய தலையங்கள் கூட எழுதப்படுகின்றன. அதிலும் யாழ்ப்பாணத்தில்இருந்து வரும் பத்திரிகை ஒன்று ரீ.ஆர்.பாலுவின் செய்தியை தலைப்புச் செய்தியாக்கி அவரைக் கௌரவித்தேயிருக்கிறது. கருணாநிதியின் செய்திக்குக் கட்டம் கட்டப்பட்டு, கவனக் குவிப்பைச் செய்திருக்கிறது.

ஆகவே இதையெல்லாம் எளிதில் நீங்கள் கருதி விட முடியாது. நகைச்சுவையான விசயங்களுக்கு இத்தகைய முக்கியத்துவத்தை வழங்கும் இந்த ஊடகக் கலாச்சாரம் வளர்ந்தால் அரசியல் ரீதியாகப் பின்னடைவில் இருக்கும் ஈழத்தமிழர்களுக்குச் சற்று றிலாக்ஸாக இருக்கும்.

தமிழக அரசியல்வாதிகள் அனைவரும் ஈழத்தமிழரின் விசயத்தில் அல்லது இலங்கை இனப்பிரச்சினையின் விசயத்தில் இந்த மாதிரி நகைச் சுவையாகவே நடந்து கொள்வதுண்டு.

இதில் ஈழ ஆதரவுச் சக்திகள், எதிர்ப்புச் சக்திகள், ஆட்சி அதிகாரத்திலிருப்போர், ஆட்சியை விட்டு இறங்கியோர் என்ற பேதங்களெல்லாம் இருப்பதில்லை. சீமான், வை.கோ, நெடுமாறன், சுப்பிரமணியம் சுவாமி, திருமாவளவன், ஜெயலலிதா, மு.கருணாநிதி, சோ என்று யாரும் விலக்கில்லை. எல்லோரும் ஒரே மாதிரியே கதைக்கிறார்கள். அல்லது ஒரே விதமாகவே நடந்து கொள்கிறார்கள். உண்மைக்கும் யதார்த்தத்துக்கும் வெகு தொலைவிலேயே இவர்கள் இருக்கிறார்கள்.

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்கும் உபாயங்களைக் குறித்து இலங்கையர்களுக்கே இன்னும் தெளிவில்லை. அதிலும் ஈழத் தமிழர்களே இந்த விசயத்தில் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் தடக்குப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆளுக்கொரு கட்சி, கட்சிக்கொரு தலைவர் என்றெல்லாம் இருந்துங்கூட ஒரு வழி முறையைக் கண்டு பிடிப்பதற்கு முடியாமலே இருக்கின்றனர். இந்த நிலையில் வெளியே - பிரச்சினைக்கும் அதனுடைய வலிக்கும் அப்பால் நின்றுகொண்டே மருந்தைக் கண்டு பிடிக்க முண்டியடிக்கும் இந்த மருத்துவர்களை என்னவென்பது? முதலில் ஒரு விசயத்தைப் பார்ப்போம். தமிழகத்தில் ஏராளம் பிரச்சினைகள் இருக்கின்றன. கூடங்குளம் அணுமின் நிலையம் பற்றிய விவகாரம், காவேரி நீர்ப்பிரச்சினை, முல்லைப்பெரியாறுப் பிரச்சினை, சீரான மின் விநியோகம்.... என ஆயிரம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள்.

இதைவிட தமிழக மீனவர்களால் ஈழத்தமிழ் மீனவர்கள் பாதிக்கின்ற தலையாய பிரச்சினை வேறு இருக்கிறது. இதையெல்லாம் இவர்கள் தீர்ப்பதற்கு முயற்சிப்பதில்லை. இவற்றை இவர்கள் தீர்க்க வேண்டும். இவர்கள்தான் இவற்றுக்குத் தீர்வு காணவும் வேணும்.

ஆனால், இதையெல்லாம் விட்டுவிட்டு இலங்கையின்இனப் பிரச்சினைக்கு கடந்த முப்பது ஆண்டுகளாக மாறிமாறி சீசனுக்குத் தக்கமாதிரி சுவரொட்டி விளம்பர வைத்தியம் பார்க்க முயற்சிக்கிறார்கள்.

இப்பொழுது தனித்தமிழ் ஈழத்துக்காக ஆதரவைத் தேடும் தி.மு.க. அல்லது அதனுடைய தலைவர்கள் தங்களுடைய ஆட்சிக்காலத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

தி.மு.க. ஆட்சியிலிருந்த போதே - தி.மு.க. பங்கேற்ற கூட்டரசு டில்லியில் ஆட்சியிலிருந்த போதே ஈழப் போரின் இறுதி நாட்களில் ஆயிரக் கணக்கானவர்கள் பலியானார்கள்.

அப்பொழுது இதற்கெதிராக இந்தியா தலையிட்டுஇந்தப் பலியைத் தடுப்பதற்கு தி.மு.க வினால் முடியாமற் போய்விட்டது. அல்லது இந்தியாவைக்கொண்டு ஐ.நா. மூலம் இந்தப் பலியை தடுக்க அதனால் முடியவில்லை.

அந்த நாட்களில் திரு. மு. கருணாநிதியும் அவருடைய கட்சியும் அவருடைய குடும்பத்தினரும் ஆடிய நாடகங்களை எல்லாம் இந்த உலகமே அறியும்.

இந்தப் படுகொலைக்கெதிராக அவருடைய கட்சியைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூடப் பதவியைத் துறக்கவில்லை. அப்போது அவருடைய செல்ல மகள் கனிமொழி கூட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

யுத்தம் முடிந்த பிறகு, இலங்கை அரசு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்தபோது அந்தக் குழுவில் இதே ரீ.ஆர். பாலுவும் இதே கனிமொழியும் கூட வந்திருந்தார்கள். (அந்தக் குழுவில் திருமாவளவனும் வந்திருந்தார்).

வந்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு, வவுனியாவில் இருந்த அகதிகளின் முகாம்களுக்கு எல்லாம் விஜயம் செய்திருந்தார்கள்.

வந்தவர்களிடம் கண்ணீர்மல்க, உருக்கமான வேண்டுகோள்களை ஈழத்தமிழர்கள் விடுத்தனர். எதற்காக? உணர்வாலும் உறவினாலும் தொடர்புள்ளவர்கள் என்ற காரணத்திற்காகவே.

ஆனால், என்ன நடந்தது?

இதையெல்லாம் விட்டுவிட்டு இப்போது ஈழம் மலர்வதைப் பற்றிக் கதைக்கிறார்கள். "கூரை ஏறிக் கோழி பிடிக்க மாட்டாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்" என்று சும்மாவா சொன்னார்கள்.

தி.மு.க. நடந்து கொண்ட முறைகள் தொடர்பாக திரு. மு. கருணாநிதியிடம் மதிப்பும் மரியாதையும் தொடர்பும் உள்ள ஈழத்தமிழர் ஒருவர் - நீண்டகாலமாகவே தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் அவர், அந்த நாட்களில் தன்னுடைய அதிருப்தி கலந்த கவலைகளை வெளியிட்டபோது கருணாநிதி அவருக்குச் சொன்னாராம், "ஈழத்தில் படுகொலை நடந்தபோது அங்கே இருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அரசியற் தலைவர்களும் ஏன் பதவிகளைத் துறக்கவில்லை? நீங்கள் அதனைப் பற்றிக் கேட்டுவிட்டு பிறகு என்னிடம் இதைப் பற்றிக் கேளுங்கள்" என்று.

ஆகவே, ஈழத்தமிழர் சிந்திய கண்ணீரையும் செந்நீரையும் அவர்களுடைய உருக்கமான குரல்களையும் அரசியல் ஆதாயமாக்கியதே தி.மு.க செய்த வேலை. இந்த வேலையைத்தான் தமிழகத்தின் பிற தரப்பினரும் செய்கிறார்கள்.

மனச்சாட்சிக்கும் வெட்கத்துக்கும் அப்பால் இந்தக் காரியங்களை அவர்கள் செய்கின்றனர். இதுதான் இங்கே கவனத்திற்குரியது பெரும்பாலான ஈழத்தமிழர்களின் வேதனைக்குரியது.

ஈழத்தமிழர்களுடைய துயரங்களைத் துடைப்பதற்கும் அவர்களுக்காக ஆதரவாக இருப்பதற்கும் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தமிழக அரசும் அங்குள்ள கட்சிகளும் தலைவர்களும் தொண்டர்களும் விசுவாசமாகவும் புத்திபூர்வமாகவும் இயங்கினால் அதனை முழு மனதோடு வரவேற்பதில் யாருக்கும் எந்தத் தயக்கமும் இல்லை. கேள்விகளும் இல்லை. ஆனால், இவர்கள் எல்லாம் இலங்கை அரசின் இனவாத அணுகுமுறைக்கு மேலும் உதவுகிறார்கள் என்பதே இங்கே கவனிக்க வேண்டியது.



தமிழகத் தலைவர்களின் வீராவேச முழக்கங்களையெல்லாம் சிங்கள இன்வாதத் தலைவர்களும் ஊடகங்களும் பெரு மகிழ்ச்சியோடும் மனம் நிறைந்த புன்னகையோடும் வரவேற்கிறார்கள்.

தமிழகத்தில் வீர முழக்கங்கள் நிகழ நிகழ அது சிங்கள இனவாதத்தை மேலும் தீவிரப்படுத்தி வளர்ப்பதற்கான உரமாகவே மாறுகிறது. சிங்கள மக்களை இனவாத மயப்படுத்துவதற்கு - சிங்கள மக்களுக்கு எதிரானதமிழ்ச் சக்திகளின் செயற்பாடுகளின் அபாய நடவடிக்கைகள் எனச் சிங்கள இனவாதச் சக்திகள் ஆதாரப்படுத்துவதற்கு இவை தாராளமாக உதவுகின்றன.

தமிழகக் கட்சிகளின் வீர முழக்கங்கள் தமிழ் நாட்டு மக்களிடையே அவற்றுக்குத் தாராளமான ஆதரவைப் பெற்றுக் கொடுக்கின்றன.

அதைப்போல இலங்கையில் சிங்கள இனவாதக் கட்சிகளுக்கும் இனவாதத்தின் அடிப்படையில் செயற்படுவதற்கான தளத்தைத் தாராளமாக வழங்குகின்றன. இந்தச் செய்திகளைப் பிரசுரிக்கின்ற ஈழத் தமிழ் ஊடகங்களும் பிழைத்துக் கொண்டு விடுகின்றன. ஆனால்,

> **'ஈழத்தில் படுகொலை நடந்தபோது அங்கே இருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அரசியற் தலைவர்களும் ஏன் பதவிகளைத் துறக்கவில்லை? நீங்கள் அதனைப் பற்றிக் கேட்டுவிட்டு பிறகு என்னிடம் இதைப் பற்றிக்கேளுங்கள்' என்றாராம் கருணாநிதி.**



ஈழத்தமிழர்களின் நிலையோ மிகமிக நெருக்கடிக்குள்ளாகிறது.

பூனைக்கு விளையாட்டு எலிக்குச் சீவன் போகிறது என்று சொல்வார்கள். ஏறக்குறைய அந்த நிலையில்தான் ஈழத்தமிழர்களுக்கான தமிழகத் தலைவர்களின் ஆதரவுக் குரல்கள்(?) இருக்கின்றன. மெய்யான அர்த்தத்தில் இந்தக் குரல்கள் எதிர்க்குரல்களே.


இவர்களைப் பொறுத்தவரையில் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படவே கூடாது. அது ஒரு சுவையான பண்டமாக - தமது அரசியற் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்குஎப்போதும் இருக்கவேண்டும்.

நாம் முன்னர் ஒரு பத்தியிற் குறிப்பிட்டதைப்போல "இரத்தத்திற் தோய்த்தெடுக்கப்படும் இறைச்சி"யாக ஈழத்தமிழருடைய துயரங்களும் பிரச்சினைகளும் அவர்களுக்கு உள்ளது.

கருணாநிதி பல சினிமாக்களுக்கு வசனம் எழுதிப் பேர் எடுத்தவர். "பஞ்ச் டயலாக்" மூலம் தொண்டர்களையும் அபிமானிகளையும் மயக்கி வைத்திருப்பவர். அதற்கெனவே ஒரு பாரம்பரியத்தை உருவாக்கி வெற்றி கண்டவர்கள்.

ஆனால் அவர் பிறத்தியாரின் கண்ணீரில் சுவை காணக்கூடாது. இது அவருக்கு மட்டுமல்ல வரலாற்றுக்கு எதிராகச் சிந்திக்கும் அனைவருக்கும் பொதுவானது. பெருந்தக்கூடியது. இறுதியாக ஒரு விசயம் - தான் உயிர் துறப்பதற்கு முன்னர்தமிழீழம் மலர்வதைக் காண்பேன் என்று கருணாநிதி சொன்னதற்குக் காரணம், தன்னுடைய ஆயுட் காலத்தைமேலும் நீடிப்பதற்கான அவருடைய விருப்பமே என்று சொல்லிச் சிரிக்க வைக்கிறார் நண்பர் ஒருவர்.

# பள்ளிவாசல் நெருக்கடி தீர பதவிகளைத் துறக்கவும் தயார்



(கொழும்பு)

தம்புள்ளை பள்ளிவாசல் நெருக்கடிக்கு சுமுகமான தீர்வினை ஏற்படுத்துவதற்கு தமது பதவிகள் தடையாக இருக்குமானால் அவற்றைத் துறப்பதற்கும் தயாராக இருப்பதாக, அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அதியுயர்பீடக் கூட்டம் கட்சித் தலைவர் அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் நாட்டின் இஸ்லாமிய அதியுயர் பீடமான உலமா சபை எடுக்கின்ற தீர்மானத்தை அமுல்படுத்த தமது முழு அரசியல் பலத்தையும் பிரயோகிப்பதெனவும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பதவிகள் தடையாக இருப்பின் அவற்றைத் துறப்பதெனவும் பிரதானமாக இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஏனைய தீர்மானங்களாக தம்புள்ளை பள்ளிவாசல் மீதான தாக்குதலைக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் சம்பந்தப்பட்டோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உலமா சபை முஸ்லிம்களுக்கு சரியான வழிகாட்டுதல்களை வழங்கி, முஸ்லிம்களின் எதிர்ப்பை அமைதியான முறையில் நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் வெளிபடுத்த எடுத்த முயற்சிகளுக்கு உலமா சபைக்கு நன்றி தெரிவிப்பதோடு, அரசில் உள்நோக்கம் கொண்ட சில சக்திகள் உலமா சபையைப் பிளவுபடுத்தி தங்கள் அரசியல் இலக்குகளை அடைய எடுக்கின்ற முயற்சிகளைக் கட்சி கண்டிபபதென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தம்புள்ளை பள்ளி விவகாரத்தில் நியாயத்தின் பக்கம் நிற்கின்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், ஏனைய அரசியல் பிரமுகர்கள், மதப் பெரியார்கள் மற்றும் தமிழ், சிங்கள சகோதரர்கள் குறிப்பாக தம்புள்ளை வாழ் சிங்கள மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது - என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹமீட் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேபாள பிரஜை சடலமாக மீட்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் இயங்குகின்ற இரவு விடுதியொன்றிலிருந்து நேபாள நாட்டின் பிரஜை ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூர்ண பஹதூர் தமஹான் (வயது - 32) என்னும் நேபாள பிரஜையே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த நபர் - குறித்த இரவு விடுதியில் டி.ஜே (பாடல்களை தொகுத்து வழங்குபவர்) ஆக பணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசாங்க மருத்துவர்கள் வேலை நிறுத்த முஸ்தீபு



(கொழும்பு)

போக்குவரத்து படியை அதிகரிக்க வேண்டுமென்ற தமது கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் தவறியதையடுத்து, எதிர்வரும் வாரம் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.


அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 60 கிளைகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கடந்த வார இறுதியில் நடத்திய சங்கத்தின் கூட்டத்தின்போது ஏகமனதாக இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சங்கத்தின் தலைவர் டாக்டர் அநுருத்த பாதெனிய கூறினார்.

தமது சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, போக்குவரத்துப் படியை 15,000 ரூபாவிலிருந்து 29,000 ரூபாவாக அதிகரிப்பதாக உறுதியளிக்கப்பட்டதாகவும், ஆனால் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இந்த 15,000 ரூபா அலவன்ஸ் எரிபொருள் செலவுக்கானதாகும். தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் இந்தத் தொகை போதுமானதல்ல. அரசியல்வாதிகள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள் பலர் அரச வாகனங்களையும் ஏனைய பல சலுகைகளையும் பெறுகின்றனர். நாம் அத்தகைய நன்மைகளைப் பெறுவதில்லை. அதனால்தான் இந்தப் படியை அதிகரிக்க வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார்.

அரசாங்க மருத்துவர்கள் குறைந்தபட்ச மாதாந்த சம்பளமாக 28,000 ரூபாவை பெறுகின்றனர். ஆரம்பநிலை மருத்துவ அதிகாரிகள் அதிகபட்ச சம்பளமாக 56,000 ரூபாவைப் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பணமோசடியில் ஈடுபட்ட மாலைதீவு பிரஜை கைது



மஹரகம பிரதேசவாசியொருவரிடமிருந்து 51 ஆயிரத்து 800 ரூபா பண மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் மாலைதீவு பிரஜையொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னணி குடிபான கம்பனியொன்றிடமிருந்து தான் 500,000 பவுணஸ் வென்றுள்ளதாகவும் தனக்கு கிடைத்துள்ள இப பரிசுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தான் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் கூறி இம்மாலைதீவுப் பிரஜை ஏமாற்றப்பட்டவருக்கு குறுந்தகவலொன்றை அனுப்பிவைத்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபர் மஹரகமவை வசிப்பிடமாகக் கொண்டவரென மஹரகம பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

## ஊடகங்கள் மீது 'அன்பு' கொண்ட அமைச்சர் மேர்வின் சில்வா



(கொழும்பு)

நான் ஊடகங்கள் மீது அதிக அன்பு கொண்டவன். இலங்கையில் ஊட கங்களில் பணியாற்று வோர் ஆசியாவுக்கு மட்டுமல்ல உலகுக்கே முன்னுதாரணமானவர்கள். எந்த விடயத்தைப் பற்றியும் எழுத அவர்களுக்கு சுதந்திரம் இருக்கிறது. அவர்களுக்கு ஆற்றல் இருக்கிறது. ஆயினும் எல்லாம் முழுமை யானவை என்று கூறக்கூடிய ஊடகம் எமது நாட்டில் இல்லை என்று மக்கள் தொடர்பு மற்றும் பொதுமக்கள் அலுவல்கள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

அரச சேவையை கிராமத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஜனசெதம ஜனஹவுல" நடமாடும் மக்கள் சேவையில் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரை யாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "என்னைப்பற்றி பிழையான தகவல்களை சில தேசிய ஊடகங்கள் வெளியிடுகின்றன. சில ஊடகவியலாளர்கள் எனக்கெதிராக பொய்ச் செய்திகளை வெளியிடுகின்றனர்.

எனக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டு இருப்பதாக யாராவது நிரூபித்தால் தேர்தலில் ஒரு இலட்சத்து 52 ஆயிரம் வாக்குகளை பெற்றுள்ள நான் எனது மக்களிடம் தெரிவித்துவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்து அரசியலிலிருந்து ஒதுங்கி விடுவேன்" என்றும் கூறினார்.

## அக்னி ஏவுகணை என்ற ரணிலின் கருத்து; கவலை கொள்ளாத ஆளுநர் கப்ரால்



(கொழும்பு)

இந்தியாவின் அக்னி ஏவுகணையைவிட இலங்கையிலுள்ள அஜித் நிவாட் கப்ரால் என்ற ஏவுகணை அழிக்கும் சக்தியை அதிகமாகக் கொண்டதென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்த கருத்துத் தொடாபாக தாம் வருத்தம் கொள்ளவில்லையென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த 6 வருடங்களாக இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

எனினும் அதன் காரணமாக நாம் பின்னோக்கிச் செல்லப் போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் பொருளாதாரத்தில் பணவீக்கத்தை அவர்களால் ஒற்றை இலக்கங்களில் வைத்துக் கொள்ள முடியவில்லை.

ரூபாவின் பெறுமதி 50 வீதத்தினால் தேய்மானம் கண்டது. இவை யாவும் இன்று மறந்து போய் விட்டது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் ஒரு அரச நியமனமாவது வழங்கப்படவில்லை. அரச சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டன.

இந்தநிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சா டி சில்வா, மத்திய வங்கியின் செயற்பாடுகளை விமர்சித்து வருகிறார்.

எனினும் பொதுமக்கள். இந்த சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை கவனத்தில் கொள்ள மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சித்திரவதைக்கான ஆதாரம் நாடு திரும்புவோர் மீது இல்லை

### பிரிட்டன் தெரிவிப்பு



(கொழும்பு)

பிரிட்டனிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் குடியேற்ற வாசிகளும் அகதிகளும் சித்திரவதை செய்யப்படுவதற்கான ஆதாரங்கள் இல்லையென பிரித்தானிய அரசாங்கம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குத் திரும்பும் குடியேற்ற வாசிகளும் அகதிகளும் சித்திரவதை செய்யப்படுவதாக குற்றச்சாட்டுகள் இருந்தன.

பிரிட்டனிலிருந்து திரும்புபவர்கள் தொடர்பான இத்தகைய அனைத்துக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக எமது உயர்ஸ்தானிகராலயம் விசாரித்தது.

இத்தகைய குற்றசாட்டுகளுக்கான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை என 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையில் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் தெரிவித்துள்ளது.

## படகுப் பயணத்தின் போது உயிர்காப்பு அங்கி கட்டாயம்

பயணிகள் படகு மற்றும் மீனவர படகுகளில செல்வோர் உயிர்ப் பாதுகாப்பு அங்கிகளை அணிவது கட்டாயமென படகுகளின் உரிமையாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பயணத்தில் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெறு வதற்கே இந்த ஏற்பாடென அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

1200 இற்கும் மேற்பட்ட இளைஞர்களும் பாடசாலைப் பிள்ளைகளும் வருடாந்தம் நீரில் மூழ்கி பலியாவதாக அமைச்சின அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்விடயமாக பலமுறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும் அநேகர் அதனைக் கருத்திற் கொள்வதில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். இவ்விடயமாக கடற்றொழில் அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

அங்கி அணியாமல் செல்லும் மீனவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உல்லாசப் பிரயாண ஹோட்டல்களுக்காக வேலை செய்யும் தனியார் படகு உரிமையாளர்களுக்கும் பாதுகாப்பு அங்கிகளை வழங்க வேண்டுமென்றும் உத்தர விடப்பட்டுள்ளது.

# ஐ.தே.க. பதவிக்கு வந்தாலும், அக்கட்சியும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளை கைவிடப் போவதில்லை!

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அக்கட்சியின் உறுப்பினர்களுக்கு அழுவதா அல்லது சிரிப்பதா என்று தெரியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அக்கட்சியின் சில தலைவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவே முடியாமல் இருக்கிறது.

ஐ.தே.க.வின் ஒரு பிரிவு மேதினத்தை வடக்கிலும், இன்னொரு பிரிவு பிரேமதாசாவின் நினைவுதினத்தை தெற்கிலும் கொண்டாடியது. உட்கட்சிப் பூசலின் காரணமாக தெற்கே பிரச்சினைகள் ஏற்படலாம் என்று நினைத்து மே தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாட வேண்டும் என ஐ.தே.க. தலைமை சிந்தித்து இருந்தால் இந்த வடக்கு தெற்கு கூட்டு மேதினமும் வெறும் ஏமாற்று வித்தையே.

எவ்வாறாக இருப்பினும் ஐ.தே.க.விற்குள் வளர்ந்து வரும் இந்த முறுகல் நிலை நாட்டுக்கு நல்லதல்ல. குறிப்பாக நாட்டுக்கு பலமானதோர் எதிர்க்கட்சி அவசியமாக இருக்கும் நிலையில் இந்தப் பிணக்கு முழு நாட்டையே பாதிக்கிறது. பலமான எதிர்க்கட்சி இல்லாமை நாட்டுக்கு உகந்ததல்ல என்று ஜனாதிபதியே பல முறை கூறியிருக்கிறார். அது உண்மையே.

ஐ.தே.க. பதவிக்கு வந்தாலும் அக் கட்சியும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளை கைவிடப் போவதில்லை. அதற்கு வரலாறு சான்றாக இருக்கிறது. ஆனால் பலமான எதிர்க்கட்சியொன்று இருந்தால் அக்கட்சி அரசியல் இலாபம் தேடுவதற்காக இந்தப் பிரச்சினைகளை கையிலெடுக்கும். அது ஆளும் கட்சிக்கு ஒரு நெருக்குதலாக அமையும். அதனால் நிலைமை சீரடையாவிட்டாலும் மோசமடையும் வேகமாவது குறையும். அதனால் தான் ஐ.தே.க. விற்குள் இருக்கும் தற்போதைய தலைமைத்துவச் சண்டை நாட்டுக்கும் மக்களுக்கும் தீங்காக அமைந்துள்ளது.

- ஐயூப் கட்டுரையிலிருந்து

# தமிழீழக் கனவும் ஒரு தந்திரோபாயமே!



அழகிரி, ஸ்டாலின் இடையிலான மோதலைத் திசைதிருப்பவே இலங்கையில் தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி மீண்டும் கூற ஆரம்பித்துள்ளதாக "தி டெலிகிராப்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தி.மு.க மீதான கறையைப் போக்கவும், இந்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசுக்கு நெருக்கடி தரவுமே இலங்கை விவகாரத்தை கருணாநிதி கையில் எடுத்துள்ளதாக இந்திய காங்கிரஸ் கட்சி கருதுகிறது.

ஆனால், அழகிரி - ஸ்டாலின் இடையிலான பிரச்சினையை திசை திருப்புவதற்காக மேற்கொள்ளப்படும் உத்தி தான் இது என்று "தி டெலிகிராப்" தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழீழம் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக 1980ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர்களின் அமைப்பான டெசோ அமைப்புக்கு மீண்டும் புத்துயிரளித்து சென்னையில் கூட்டத்தை நடத்தியுள்ளார் கருணாநிதி. தி.மு.க.வின் இந்த முயற்சி இந்தியத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்றும் டெலிகிராப் கூறியுள்ளது.

நம் முன்னோர்கள் தலையைச் சுத்தம் செய்வதற்கு சீயக்காய் தூள்தான் பயன்படுத்தி வந்தனர். அவ்வாறு பயன்படுத்தி வந்தபோதெல்லாம் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. எப்போது நவ நாகரிகப் பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்களோ அப்போது வந்தது தலைக்கு ஆபத்து! தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தால் 5 நிமிடங்களுக்கு ஒரு முறை ஏதேனுமொரு ஷாம்பூ விளம்பரம்தான் வருகிறது!

இன்றைய நவநாகரிக உலகில் எல்லோரும் தலைக்கு ஷாம்பூதான் பயன்படுத்துகிறார்கள். கடந்த 20 ஆண்டுகளாக அழகு சாதனப் பொருள்கள் மீதான மக்களின் மோகம் வெகுவாக அதிகரித்துள்ளது. அவற்றால் மக்கள் எளிதில் ஈர்க்கப்படுகின்றனர். இதனால், ஏற்படக்கூடிய நன்மைகளைவிட தீமைகளே அதிகம் என ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்ட ஷாம்பூகளைக் காட்டிலும் தற்போது தயாரிக்கப்படும் அதிநவீன ஷாம்பூகளில் நறுமணத்திற்காகவும், அதிகம் நுரை வரவேண்டும் என்பதற்காகவும் அதிகமாக இரசாயனப் பொருள்கள் சேர்க்கப்படுவதால், மக்களுக்கு வெகு விரைவில் தீமை உண்டாகிறது என்றும் தெரியவருகிறது.

ஷாம்பூவால் தலைக்கும் உடலுக் கும் தீமை ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது



# அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் யார்?



பெரும்புலவரான சம்பந்த சரணாலயர் கன்னங்கரேல் என்ற நிறத்துடனும் குள்ளமாகவும் இருந்தார். ஒருமுறை அவர் அரசவைக்குள் நுழைந்தார். அவரை முன்பின் பார்த்திராத அரசன், "இவர் அண்டங்காக்கைக்குப் பிறந்திருப்பாரோ" என்று உரக்கச் சொன்னான்.

இதைக் கேட்டு அவையில் இருந்த எல்லோரும் சிரித்துவிட்டனர்.

உடனே சம்பந்த சரணாலயர், "அரசே! நான் அண்டங்காக்கைக்குப் பிறந்தவன் அல்லன், தாங்கள் தாம் அண்டங்காக்கைக்குப் பிறந்தவர்" என்றார். இதனால் புலவருக்கு என்ன துன்பம் நேருமோ என எல்லோரும் நடுங்கினார்கள்.

அரசன் கோபத்துடன், "யாரைப் பார்த்து அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் என்று கூறினீர். உமக்கு என்ன துணிச்சல்? இப்போது உம்மை என்ன செய்கிறேன் என்று பாரும்!" என்று சீறினான்.

ஆனால் புலவரோ அமைதியாக, "நீங்கள் அண்டங்காக்கைக்குப் பிறந்தவர்தாம். அண்டம் என்றால் உலகம், கீாக்கைக்கு என்றால் காப்பதற்கு அதாவது இந்த உலகத்தைக்காப்பதற்குப் பிறந்தவர் தாங்கள்தாம். நானா அண்டங்காக்கைக்குப் பிறந்தவன் அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் தாங்கள்தாம் என்பதில் என்ன சந்தேகம்" என்றார்.

புலவரின் சிலேடை நயத்தைக் கேட்டு அரசன் உள்ளிட்ட எல்லோரும் சிரித்தனர்.

# விக்ரம், எமி - தாண்டவம்!

சாமியை அடுத்து, தற்போது "தாண்டவம்" படத்திலும், பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் விக்ரம். இரு வேடங்கள் தாங்குகிறார். பொலிஸ் அதிகாரியாகவும், கண் பார்வை இல்லாதவராக இன்னொரு வேடத்திலும் நடிக்கிறார். மதராசப்பட்டினம் இயக்குநர் விஜய், அப்படத்தில் நடித்த ஆங்கிலேய அழகி எமி ஜாக்ஸனையே இப்படத்திலும் கதாநாயகியாக்கியிருக்கிறார். மதராசப்பட்டினம் முடிந்த கையோடு பொலிவுட் சென்ற எமி அங்கு பல படங்களில் கலக்கியது மட்டுமல்லாமல் காதலிலும் விழுந்து திரும்பியிருக்கிறார். தமிழில் தனக்குத் தெரிந்த ஒரே நடிகர் ஆர்யாதான் என்று சொல்லிக்கொண்டிருந்த எமி, விக்ரமையும் தெரிந்துகொள்ளப் போகிறார். இப்படத்தில் விக்ரம் தாண்டவமாடப் போகும் அந்த வேடம் பற்றி இப்போதே வெளியில் சொன்னால், சுவாரஷ்யம் குறைந்து விடும் என்பதற்காக, அதுபற்றிய செய்தி வெளியிடாமல், சஸ்பென்சாக படமாக்கி வருகிறார் விஜய்.



# மோசமான நடிகை!


சினிமா ரசிகர்களைக் கவர்வதற்கு விளம்பர உலகம் கண்டுபிடித்திருக்கும் மற்றுமொரு உத்தி விருது வழங்கும் விழாக்கள். நேரிலும் தொலைக்காட்சிகளிலும் இதற்கு ஏராளமான ரசிகர்கள் கூடுவதால் தங்கள் விளம்பரத்திற்காக ஒவ்வொரு தயாரிப்பு நிறுவனமும் விதவிதமான விருதுகளை வழங்கி விழா நடத்திக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் பொலிவுட் நடிகர், நடிகைகளுக்கான விருதுகளை சமீபத்தில் கோல்டன் கேலா என்ற அமைப்பு வழங்கியது. இதில், சிறந்த நடிப்புக்கு மட்டுமல்லாமல் மோசமான நடிப்புக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. கடந்த ஆண்டு பல படங்களில், "ஐட்டம்" டான்ஸ் ஆடிய தீபிகா படுகோனேக்கு மோசமான நடிகை விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், மனமுடைந்து போயிருக்கும் தீபிகா, இனி, படங்களில் "ஐட்டம்" டான்ஸ் ஆடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார். இனி ரசிகர்களல்லவா மனமுடையப் போகிறார்கள்!



# கப்டன் மகனும் கதாநாயகன்!

விஜயகாந்தின் இளைய மகன் ஷண்முகப் பாண்டியனை சினிமாவில் நடிக்க வைக்க வேண்டும் என்று முடிவெடுத்த விஜயகாந்த், அவனுக்கு ஏற்ற கதையாக தேடிக் கொண்டிருந்தார். இறுதியாக தெலுங்கில் ஜுனியர் என்.டி.ஆர் நடித்து சூப்பர் டூப்பர் ஹிட் ஆன பிருந்தாவனம் படத்தை தமிழில் தனது மகன் ஷண்முகப்பாண்டியனை வைத்து ரீமேக் செய்ய திட்டமிட்டுள்ளார்.

விஜயகாந்த் தயாரிக்க உள்ள இந்தப் படத்தில் காஜல் அகர்வால் மற்றும் சமந்தா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்க உள்ளனர். படத்தின் சண்டைக் காட்சிகள் மற்றும் நடனத்தை ஷண்முகப்பாண்டியனே கவனித்துக் கொள்கிறார். டி.ராஜேந்தர் போலவே மகனை எல்லாக் கலைகளும் கற்க அனுப்பி வளர்த்திருக்கிறார் கப்டன். முதல் படத்திலேயே புகழ் சேர்க்க வேண்டும் என்று தந்தையும் மகனும் நினைத்துள்ளனர்.



# இயக்குநராகிறார் விஜய் ஆதிராஜ்!

தொலைக்காட்சியில் தொகுப்பாளராகவும், பல்வேறு தொடர்களிலும் நடித்துப் புகழ் பெற்ற விஜய் ஆதிராஜ் புதிதாக படம் இயக்க உள்ளார். இந்தப் படத்திற்கு "புத்தகம்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகப் போகும் புதுமுகம் நடிகர் ஆர்யாவின் தம்பி சத்யா. இவருக்கு ஜோடியாக பஞ்சாப்பிலிருந்து மற்றொரு சிம்ரன் ரகுல் ப்ரீத்சிங் வருகிறார்.

விஜய் ஆதிராஜ் கதை எழுதி இயக்கும் இப்படத்திற்கு வசனங்கள் குஹன் ஸ்ரீனிவாசன். விஜய் ஆதிராஜின் நண்பரும், இசையமைப்பாளருமான ஜேம்ஸ் வசந்தன் இசையமைக்க, நா. முத்துக்குமார் பாடல்களை எழுதுகிறார். படம், காதலையும், காமெடியையும் கலந்ததாக இருக்குமாம்.

# தலைக்கு வந்திருக்கும் ஆபத்து!

இன்று நேற்றல்ல, கடந்த 01.03.1993 அன்றே அறிவியல் நிபுணர்களாலும் மருத்துவர்களாலும் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இன்றளவும் நாம் ஷாம்பூவை பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்.

தலைக்குப் பயன்படுத்தும் ஷாம்பூ கூந்தலில் உள்ள



அழுக்கைப் போக்குவதற்கும் கூந்தல் பளபளப்பாக இருப்பதற்கும் உதவுகிறது என்று அனைவரும் நம்புகின்றனர். ஆனால், ஷாம்பூவால் கூந்தலில் உள்ள அழுக்கு நீங்குவதில்லை என்றும், கூந்தல் பளபளப்புடன் பொலிவுறுவதில்லை என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஷாம்பூவால் கெடுதல்தான் மிகுதியே தவிர, நன்மை துளியும் இல்லை என்கிறது அந்த ஆய்வு.

உடுசான் கன்ஷியூமர் எனும் மலேசிய பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள தகவலின்படி பிரபல ஷாம்பூகள் மற்றும் அழகு சாதனப் பொருள்கள் பலவற்றிலும் நைட்ரோசமைன் எனும் இரசாயனப்பொருள் கலக்கப்படுகிறது. இந்த இரசாயனப் பொருள் புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மை கொண்டது என சோதனையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இரசாயனப் பொருள் நிறைந்த ஷாம்பூவை நாம் தேய்த்துக் குளிக்கும்போது, கூந்தலுக்குப் பாதிப்பு, முடி உதிர்தல், தோல் வியாதிகள் போன்றவையும் ஏற்படுகின்றன.

மேலும், இதுபற்றி விரிவான ஆய்வுகளில் ஈடுபட்ட ஜப்பானிய ஆய்வாளர்கள், பரிசோதனைக் கூடங்களில் எலிகளுக்கு அவற்றின் உடலின் மீதிருந்த முடியினை நீக்கிவிட்டு, வெறும் தோலில் ஷாம்பூகளில் பயன்படுத்தப்படும் டிடெர்ஜென்ட் பொருட்களைத் தொடர்ந்து பத்து நாட்களுக்குத் தடவி வந்தனர். இதனைத் தொடர்ந்து அந்த எலிகளின் உடலில் அழற்சி ஏற்பட்டதுடன், அவ்விடங்களில் மீண்டும் முடி முளைப்பதும் நின்றுபோனது.

இவ் இரசாயனப் பொருட்களால் கர்ப்பத்திலிருக்கும் கருவிற்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தச் சோதனையும் எலிகளை வைத்தே நிகழ்த்தியுள்ளனர். இதன் காரணமாக கர்ப்பத்தில் இருக்கும் சில எலிக் குஞ்சுகளை ஆராய்ந்தபோது, அவற்றில் சிலவற்றிற்கு முதுகெலும்பில் பிளவு, அண்ணப் பிளவு போன்றவையும், உடல் உள்ளுறுப்பில் குறைகளுடனும் காணப்பட்டன.

சிலவகை ஷாம்பூகளில் பயன்படுத்தப்படும் என்டிலா எனும் ஒரு வகை நைட்ரசோமைன் விலங்குகளுக்குப் புற்றுநோயை ஏற்படுத்துவது நிரூபிக்கப்பட்டுள்ளது. நாம் இன்றைக்குப் பயன்படுத்தும் ஏராளமான அழகு சாதனப் பொருட்களில் ட்ரை - எதனோலமைன் மற்றும் டை - எதனோலமைன் போன்றவை கலந்துள்ளன. இவ்விருவகை இரசாயனப் பொருட்களும் எளிதில் தோல் வழியாக உடலினுள் உட்கிரகிக்கப்பட்டு, இரத்த ஓட்டத்தை அடையும் தன்மை உடையவை. எனவே, இவை கலந்துள்ள பொருட்களைப் பயன் படுத்துவதில் கவனம் தேவை என "நுகர்வோர் கல்வி மற்றும் ஆய்வுக்கழக" இதழில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஒரு மனிதனின் முடியின் தன்மை அவனது பாரம்பரியம், வயது, சுகாதார நிலை போன்றவற்றினாலேயே மாறுபடுகிறது. நாம் உபயோகிக்கும் ஷாம்பூகளால் உலர்ந்த கூந்தலில் ஈரப்பசையையோ, எண்ணெய்ப் பசை உடைய கூந்தல் போல பட்டுப்போல் மென்மையாகவோ மாற்ற இயலாது.

சேதமடைந்த முடியைப் புதுப்பிக்கக்கூடிய தன்மை ஷாம்பூகளால் இயலாது. ஏனென்றால், ஷாம்பூ என்பது தண்ணீர், டிடெர்ஜெண்ட், எண்ணெய், வாசனைப் பொருட்கள் மற்றும் வேறு சில பொருட்கள் நிறைந்த கலவையே ஆகும். பாத்திரங்களையும், துணிகளையும் சுத்தப்படுத்தும் டிடெர்ஜெண்ட்களே ஷாம்பூவில் (அதிகம்) கலக்கப்படுகின்றன.

நம் முன்னோர் கடைப்பிடித்த சீயக்காய்க் குளியலை விட்டு ஷாம்பூ குளியலுக்கு மாறியவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது: நீங்கள் உபயோகிக்கும் ஷாம்பூகளில் வரும் நுரைக்கும், கூந்தல் சுத்தப்படுத்தும் தன்மைக்கும் ஒரு சிறிதேனும் தொடர்பில்லை என்பதை!



# சூத்திரக் கிணறு

யாழ்ப்பாணத்தில் விவசாயம் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் விவசாயத் தேவைகளுக்காக நீரினைப் பெற்றுக்கொள்வதற்கு பண்டையகாலங்களில் சூத்திரக் கிணறுகள் எனப்படும் கிணறுகளே பயன்பாட்டில் இருந்து வந்தன.

நீண்ட ஆழத்தினையும், அகன்ற வாயினையும் கொண்ட இந்தச் சூத்திரக்கிணறுகள் மூலம் நீரிறைக்கும் முறை 1930ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டில் இருந்து வந்துள்ளதுடன், இந்தக் கிணற்றின் மூலம் சொரிவாளி முறை மற்றும் இரண்டு வாளி முறை என்பவற்றின் ஊடாக விவசாயத் தேவைகளுக்கு நீர் பெற்றுக் கொள்ளப்பட்டது.

சொரி வாளி முறையின் மூலம் நீரைப் பெற்றுக்கொள்வதற்கு மாட்டின் உதவியுடன், செக்கு முறை பயன்படுத்தப்பட்ட இதேவேளை, இரண்டு வாளி முறையில் நீரைப் பெறுவதற்கு வண்டிச் சக்கரங்கள் பயன்படுத்தப்பட்டன. தற்போது இரண்டு இஞ்சியினையுடைய நீர்ப்பம்பி மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் நீரினை, பண்டைய காலத்தில் விவசாயிகள் இந்த இருவழி முறையின் மூலம் பெற்றுக்கொண்டார்கள்.

மின்சாரம்,நீர்ப்பம்பி இயந்திரப் பாவனை என்பன மனித வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த பின்னர் இந்தப் பயன்பாட்டு முறை இல்லாமல் போய்விட்டமை குறிப்பிடத்தக்கது

- நிரு, சுகன்யா (சி)

# கடினமாக உழைக்கும் சமந்தா!

"எனக்கு எல்லாமே கவுதம் மேனன்தான்" என்கிறார் சமந்தா. "மாஸ்கோவின் காவிரி", "பாணா காத்தாடி" படங்களில் நடித்தவர் சமந்தா. இப்படங்கள் தோல்வியைத் தழுவியதால் ராசி இல்லாத நடிகை என்று ஒதுக்கப்பட்டார். இந்நிலையில் அவர் மீது கவுதம் மேனன் பார்வை விழுந்தது. அதிர்ஷ்டக் காற்று வீசத் தொடங்கிவிட்டது. தமிழ், ஹிந்தி, தெலுங்கு என 3 மொழிகளில் கவுதம் இயக்கும் "நீதானே என் பொன்வசந்தம்" படத்தில் நடிக்கிறார். 3 மொழிகளுக்கும் ஹீரோக்கள் வெவ்வேறு பேர். ஆனால் 3 மொழியிலும் ஹீரோயின் சமந்தாதான். "3 மொழியிலும் ஒரே ஹீரோயின் நடிக்க வேண்டும் என்று கவுதம் விரும்பினார். அவரது கணிப்பை மதிக்கிறேன். எப்போதுமே அவர் எனக்கு நன்மைதான் செய்வார். என் குரு, எல்லாமும் அவர்தான். மணிரத்னம் படத்தில் என்ன வேடம் என்று எல்லோரும் கேட்கிறார்கள். அது மிகவும் ரகசியம். அதுபற்றி சொல்லமாட்டேன். இந்த வருடம் எனக்கு சுமார் 8 படங்கள் ரிலீஸ் ஆகும் என்று எண்ணுகிறேன். இதற்காக கடினமாக உழைக்கிறேன்" என்கிறார் சமந்தா.





# ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு நிலப்பரப்பு?

அண்மையில் அ.முத்துலிங்கம் குறித்து வெங்கட் சாமிநாதன் கட்டுரையொன்று எழுதியிருந்தார், "ஒரு வித்தியாசமான புலம் பெயர்ந்த ஈழத் தமிழ்க்குரல்". அதில் வெங்கட் சாமிநாதன், "தமிழும் அழிந்துதான் போகும். ஒரு சில மில்லியன் பேரே பேசும் மால்டீஷ் (மால்டா), திவேஹி (மாலைதீவு), ஐஸ்லாண்டிக் (ஐஸ்லாந்து) இவையெல்லாம் அழியாது. ஆனால் தனக்கென ஒரு நாடு இல்லாத தமிழ் அழிந்துவிடும்" என்று சொல்லும் இராக்கியை மேற்கோள் காட்டுகிறார் ("சுவருடன் பேசும் மனிதர்" என்ற அ.முத்துலிங்கம் எழுதிய சிறுகதையில் வருகிறது).

அ.முத்துலிங்கமோ, வெங்கட் சாமிநாதனோ ஒவ்வொரு மொழிக்கும் ஒரு நிலப்பரப்பு இருப்பதென்பது சாத்தியமில்லை என்பதை அறியாதவர்களல்ல. தமிழ் மீது கொண்ட அக்கறையால் மட்டுமே இதைப் பேசுவதாக இருக்க வேண்டும். ஏனெனில் இந்தத் தர்க்கத்தை நீட்டித்துச் சென்றால் தமிழகத்தில் உள்ள, தமிழகத்துக்கு உரிய, தமிழைவிடத் தொன்மையான, தமிழைவிட அழிவுக்கு மிக அருகில் உள்ள மொழிகளுக்கும் தமிழகத்தையும் துண்டாக்கித் தர வேண்டியிருக்கும்.

இன்றைய பண்பாடும், ஆட்சிமுறையும், மையத்தில் தம் அதிகாரத்தைக் குவித்து வைத்திருக்கின்றன. நம் நாகரிகம் இந்தக் குவிமையத்தை நோக்கி நம்மைச் செலுத்துவதாக இருக்கிறது. நிலத்தை வரையறையாகக் கொண்ட தேசிய அமைப்பொன்று மொழி, பண்பாடு, மற்றும் இன அடையாளங்களைக் காக்கும் என்பது எதிர்பார்ப்பு. இதில் உண்மையும் இருக்கலாம்.

ஆனால், வேலிகள் காப்பதோடு பிரிக்கவும் செய்கின்றன. புதிதாய் அமைக்கப்படும் வேலிகள் ஒரு சமூகத்தின் பெரும்பான்மை




மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் அதே நேரத்தில் ஒரு புதிய சிறுபான்மையினரை உருவாக்கி, அவர்களுக்கும், அவர்களுடைய மொழி, பண்பாடு, இனம் மற்றும் வாழ்வுமுறைகளுக்கும் அச்சுறுத்தலாகவும் இருக்கிறது.

இன்றைய தலைமுறைக்குச் செல்லப்பிள்ளைகளாக இருக்கும் சிறுபான்மையினர் நாளைய தலைமுறையின் வெறுப்புக்கும் காழ்ப்புக்கும் ஆளாகக்கூடிய சாத்தியத்தை நீக்க வழியில்லை. அதிகாரக் குவிமையங்களைக் குலைக்க வேண்டுமேயல்லாமல், புதிய குவிமையங்கள் உருவாவது சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது.

- நந்தின் அரங்கன்.

# பதில்



தெருக்களில் திரிந்தேன்.
வானக்
காட்டிலே மாலைப்போதின்
குழப்பத்தில் சிக்கிக்கொண்டேன்.

நான் நின்றால்
தானும் நின்று
நான் சென்றால்
தானும் மேலே
தொடர்கிற நிலவைப் பார்த்தேன்.


வானத்தில் வர்ணக்கோலம்
விசிறிடத்
திகைத்த மீனைப்
போய்க் கொத்தும் பறவை போல
ஒரு கேள்வி மனசுக்குள்ளே.
என்னடா செய்வாய் தம்பி

பெரியவன் ஆனபின்பு
என்றொரு கேள்வி கேட்டார்
இளமையில் சிலபே ரென்னை.

அன்று நான் அதற்குச் சொன்ன
பதிலொன்றும் நினைவில் இல்லை
இன்று நான் என்ன சொல்வேன்?
அதைக் கேட்க அவர்கள் இல்லை.

- ஞானக்கூத்தன்

# குமுழமுனை மகா வித்தியாலய குறைகளைக் களைய கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - குமுழமுனை மகாவித்தியாலய த்தின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பல்வேறு செயற் திட்டங்களை உடனடியாக நடைமுறைப் படுத்து மாறு இப்பகுதி மக்கள் துறைசார்ந்தவர் களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குமுழமுனை மகாவித்தியாலய மைதானத்தை விஸ்தரிப்பது தொடர்பிலுள்ள பிரச்சினைகள் தொடர் பாக தாம் பல தரப்பினருக்கும் சுட்டிக் காட்டியிருந்த போதும் இது தொடர்பில் பாராமுகமாக இருப்ப தாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மைதானத்திற்கு அருகிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான காணியை பாடசாலைக்குப் பெற்றுக் கொண்டு அதற்கு மாற்றீடாக வேறொரு காணியை வழங்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இப்பாடசாலையில் ஆங்கிலம், நாடகமும் அரங்கியலும் மற்றும் பூகோள சாஸ்திரம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் கற்றல், கற்பித்தல் செயற் பாடுகளுக்கு இடையூறுகள் இல்லாமல் குறித்த பாடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர் களை உடனடியாக நியமிக்குமாறும் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

உரிய அதிகாரிகள் இப் பிரச்சினைகள் தொடர்பில் நட வடிக்கைகளை எடுக்க வேண்டு மென இப்பிர தேச மக்கள் வேண்டுகோள் விடுக் கின்ற னர்.

# நில்வள கங்கையில் முதலைகள் இறப்பு

(கொழும்பு)

நில்வள கங்கையில் கடந்த சில நாட்களாக மரணித்த முத லைகளின் சடலங்கள் மிதப்பதை அவதானித்து வருவதாக பிர தேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 26 ஆம் திகதி முதல் இது வரையில் இவ்வாறு மரணித்த 5 முதலைகளின் சடலங்கள் நீரில் அடித்துச் செல்லப்படு வதை பிரதேச மக்கள் அவ தானித்துள்ளனர்.

எவ்வாறாயினும் இது பற்றி எவரும் அக்குரெஸ்ஸ பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரி களுக்கோ அறிவிக்கவில்லை. அண்மையில் நில்வள கங்கை யில் முகம் கழுவிக்கொண்டி ருக்கும் போது பாடசாலை மாணவி ஒருவரை முதலை தாக்கி மர ணித்ததன் பின்னர் நில்வள கங்கையிலுள்ள முதலைகள் தொடர்பாக பாரிய குழப்பமான நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும்.

அதன் பின்னர் வன ஜீவராசி கள் திணைக்களத்தினால் நில் வள கங்கையிலுள்ள முதலை களைப் பிடித்து வேறு இடங்க ளுக்கு விடுவிக்கும் பணி ஆரம் பிக்கப்பட்ட போதிலும் தற்போது அப்பணி நிறுத்தப்பட்டுள்ளதாக வும், இந்நிலையில் முதலைகள் இவ்வாறு மரணித்த நிலையில் சடலங்களாக அடித்துச் செல்லப் படுவதாகவும் கூறப்படுகின் றது.

# ஹிருணிகாவுக்கு பொலிஸ் பாதுகாப்பு



(கொழும்பு)

கொலன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்ற அரசியல் மோத லொன்றில் கொல்லப்பட்ட ஜனா திபதியின் முன்னாள் ஆலோ சகர் பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

கொழும்பு - கறுவாத்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஹிரு ணிகாவின் வீட்டுக்கு இந்தப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தி யட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனக்கு அச்சுறுத்தல் காணப் படுவதாக ஹிருணிகா பிரேமச் சந்திரவினால் பொலிஸில் செய் யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்தே அவருக்கு பொலிஸ் பாது காப்பு வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச் சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நூதனசாலையைப் பாதுகாக்க பொலிஸ் சோதனைச் சாவடி

(கொழும்பு)

கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள தேசிய நூதனசாலைக்கு புதிய பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட இந்தச் சோதனைச் சாவடி கடந்த 28 ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் கீழ் மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பில் 15 பொலிஸ் அதிகாரி களைக் கொண்டு இந்தச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத் திற்கு பொறுப்புடையதாக இந்தச் சோத னைச்சாவடி இயங்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

# கைக்குண்டுகள் மீட்பு



மட்டக்களப்பின் புறநகர்ப் பகுதியான திராய்மடுப் பகுதியில் உள்ள சுவிஸ் கிராமம் சுனாமி வீட்டுத்திட்ட வீடு ஒன்றி லிருந்து இரண்டு கைக்குண்டுகளை மட்டக்களப்பு பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை அப்பகுதியி லிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வளவொன்றிலிருந்து இந்தக் கைக்குண்டு கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டுகள் மட்டக்களப்பு பொலிஸ் நிலை யத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐம்பதாயிரம் ஊதியமா? செலுத்துங்கள் வருமான வரி



(கொழும்பு)

ஐம்பதாயிரம் ரூபாவுக்கு அதிகமாக மாத வருமானத்தை பெறும் அரசியல்வாதிகள் மற் றும் அரச அதிகாரிகள் இனி வரும் காலங்களில் வருமான வரியைச் செலுத்தவேண்டும்.

இதற்கான சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படவுள்ள தாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், 50 ஆயிரம் ரூபாவை வருமான மாக பெறும் அரசியல்வாதி களும் அரச அதிகாரிகளும் 4 வீதத்தை வருமான வரியாகச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுவரைகாலமும் இந்த நடைமுறை இருக்கவில்லை. எனினும் நாட்டின் நலன்கருதி இந்த நடைமுறையைப் பின் பற்ற அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் தங்கள் அர்ப் பணிப்பை மேற்கொள்ளவேண் டும்.

நாட்டினுள் நீண்ட கால பொரு ளாதாரத் தன்மையை ஏற்படுத்த அரசாங்கம் கடந்த காலங்களில் பாரிய நடவடிக்கைகளை முன் னெடுத்தது. நாட்டின் பொருளா தாரம் மேம்பட வேண்டுமெனின் ஏற்றுமதி அதிகரிக்கப்பட வேண்டும். இதுதவிர செலவுகள் குறைக்கப்படவேண்டும்.

பொருட்களின் விலை அதி கரிக்கப்படுவதாக குற்றம் சுமத் தும் எதிர்கட்சிகள் அதற்கு மாற்று வழிமுறைகளை முன் வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கழிவுப் பொருளில் மின் உற்பத்தி

(கொழும்பு)

கொழும்பு நகரில் உள்ள கழிவுப் பொருட்களைக் கொண்டு, மின்சாரத்தைப் பெறும் வேலைத்திட்டம் ஒன்றுக்காக உலக வங்கி நிதி உதவி வழங்கியுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை இந்தியா வின் நிறுவனம் ஒன்று பொறுப்பேற் றுள்ளது.

இதற்காக 9 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி வழங்குகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக் கின்ற மின்சாரத்தை, தேசிய மின்சார வலையமைப்புடன் இணைக்க நட வடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதிலிருந்து 10 மெகா வோல்ட் மின் சாரத்தைப் பெறமுடியும் என எதிர்பார்க் கப்படுகிறது.

# தொழில் வாய்ப்பு மோசடி; சந்தேக நபர் சிக்கினார்

(கொழும்பு)

தொழில்வாய்ப்புப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்து நான்கு கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி மோசடியில் ஈடுபட்ட போலி தொழில் வாய்ப்பு நிறுவனமொன்றின் உரிமை யாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சைப்பிரஸ், இஸ்ரேல், மலேஷியா உள் ளிட்ட சில நாடுகளில் தொழில்வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறியே அவர் மோசடி யில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தின் விசேட விசாரணைகள் பிரிவினால் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் மஹர கமவைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படு கிறது.

குறித்த சந்தேகநபர், அதிக சம்பளத்துடன் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள 56 பேரிடம், பல இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுத் தப்பிச் சென்றிருந்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் தெரிவிக்கின்றது.

சந்தேகநபர் நீர்கொழும்பு நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட தன் பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# நெல்லை விற்பனை செய்ய சிரமப்படும் முல்லை விவசாயிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நெற் செய்கையாளர்கள் நெற்செய்கை தொடர்பில் பல்வேறு பிரச்சினை களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

செய்கை பண்ணும் நெல்லை விற்பனை செய்ய முடியாது உள்ளதாகவும் இதனால் தாம் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட புதுக் குடியிருப்பு பிரதேச நெற்செய் கையாளர்கள் தெரிவித்துள் ளனர்.

இவ்விடயம் தொடர்பில் தாம் பல்வேறு தரப்பினருக்கும் தெரி யப்படுத்தியிருந்த போதிலும் அவர்கள் பாராமுகமாகவே இருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிர தேச செயலர் பிரிவிற்குட்பட்ட நெற் செய்கையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன் நெல்லைக் களஞ் சியப்படுத்தக்கூடியதாக உடை யார்கட்டுப்பகுதியில் நெற் களஞ்சியமொன்று அமைக் கப்பட வேண்டுமெனவும் அவர் கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களின் போது இறக்கு மதி செய்யப்படும் அரிசிக்குப் பதிலாக உள்ளூர் அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை யெடுக்குமாறும் இப்பகுதி நெற் செய்கையாளர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

# தலைமன்னார் பிரதான வீதியில் முதலைகளின் நடமாட்டம்

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள கிராமங் களில் கடந்த சில நாட்களாக முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள பல குளங்கள் மூடப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இக்குளங்களிலிருந்த முதலைகள் காடுகளுக்கு சென்றுள்ள நிலையில் இம்முதலைகள் இரவு நேரங்களில் அப்பகுதிகளில் உள்ள வீடுகளை நோக்கி படையெடுக்க ஆரம்பித் துள்ளன.

இம்முதலைகள் காரணமாக கரிசல், ஓலைத்தொடுவாய் உள்ளிட்ட பல கிராம மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளதுடன், இரவு நேரங்களில் வெளியில் செல்ல முடியாதுள்ளனர்.


**பின்வரும் வேலைகளைச் செய்வதற்கு உகந்த கருவிகளின் பெயர்களை எழுதுங்கள்.**

33) மரக்குற்றி ஒன்றில் ஆணியை அறைதல். (.......................................................)

34) பெரிய பாறாங்கல்லை லொறியொன்றினுள் ஏற்றுதல். (.......................................................)

35) மீன் ரின் ஒன்றை வெட்டித் திறத்தல். (.......................................................)

36) நான்கு உலர் மின்கலம், ஒரு மின்குமிழ், வயர் கம்பித் துண்டு என்பவற்றைக் கொண்டு மின்குமிழை ஒளிரச் செய்யும் விதத்தை வரைக.



37) ஒரு மாணவ குழுவிடமிருந்து அவர்கள் விரும்பும் பானங்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு, அத்தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விரும்பும் பானங்கள் | மாணவர் தொகை |
|---|---|
| (1) தேநீர் | 𝍸, 𝍸, 𝍸, 𝍸, 𝍸, // |
| (2) கோப்பி | 𝍸, 𝍸, 𝍸, //// |
| (3) பால் | 𝍸, 𝍸, //// |
| (4) பழரசம் | 𝍸, 𝍸, 𝍸, / |
| (5) சர்பத் | 𝍸, 𝍸, 𝍸, //// |

1) பாலை விரும்பும் மாணவர் தொகையை விட, தேநீரைக் கூடுதலாக விரும்பும் மாணவர் தொகை யாது? (.......................................................)

2) இந்த ஐந்து வகையான பானங்களையும் விரும்பும் மாணவர் தொகை யாது? (.......................................................)


3) ஒரு தேநீர் கோப்பை ரூபா 8.00 எனில், தேநீருக்காகச் செலவாகும் பணம் எவ்வளவு? (.......................................................)

4) தேநீரை விரும்பும் மாணவர் தொகையிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் பழரசத்தைக் குறைவாக விரும்புகின்றனர்? (.......................................................)

38) ஒரு குளிர்சாதனப் போத்தல் மூலம் 15 பேரை உபசரிக்கலாம் எனில் 122 பேரை உபசரிக்க எத்தனை குளிர்பானப் போத்தல்கள் தேவை? (.......................................................)

39) 750 கிராம் வாழைப்பழம் ரூபா 60.00 ஆயின் 1 கிலோ 250 கிராம் வாழைப்பழத்தின் விலை எவ்வளவு? (.......................................................)

**மூன்று எலிகள் பயணம் செய்த பாதையை வரிப்படம் காட்டுகிறது**




40) அதிக தூரம் பயணம் செய்த எலி எது?
1) A 2) B 3) C

41) அதிக தடவைகள் இடது புறம் திரும்பிய எலி எது?
1) A 2) B 3) C

42) ஒரு மாணவன் பாடசாலை விட்டுச் செல்லும் வேளை திடீரென இடிமின்னலுடன் மழை பெய்யத் தொடங்கியது. இவ்வேளை அம்மாணவனுக்கு ஏற்பட்ட உணர்வுகளை விளக்கக் கூடியவாறு ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் 4 சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியா இருக்க வேண்டும்)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி



கல்வி முரசு
வெளியீடு 61
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01) பின்வரும் பாடலை வாசிக்க.

கடலின் மீது செல்லும் கப்பல்
பார், தம்பி பார் - அதைக்
காணப் பலர் வருவதையே
பார், தம்பி பார்

தடதடென்று அலைகள் வந்து
பார், தம்பி பார் - கரைலைத்
தழுவி விட்டுப் போதையே
பார், தம்பி பார்.

சங்கும் நல்ல கிளிஞ்சல்களும்
பார், தம்பி பார் - இங்கே
சரளமாகக் கிடைக்குதுடா
பார், தம்பி பார்

பொங்குகின்ற பாலினைப் போல்
பார், தம்பி பார் - இங்கு
தங்கி நிற்கும் நுரையுண்டு
பார், தம்பி பார்.

1) மேற்குறித்த பாடலில் எதனைப் பற்றி விபரிக்கப்படுகிறது? (.......................................................)

2) இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. (.......................................................)

3) இங்கு பெயராகவும், வினையாகவும் வரும் சொல் எது? (.......................................................)

4) எழுவாய், அடைமொழி ஒன்றை எழுதுக. (.......................................................)

5) ‘கிளிஞ்சல்’ என்பதன் ஒத்தசொல்லை எழுதுக. (.......................................................)

6) இங்கு இடம்பெறும் இரட்டைக்கிளவி எது? (.......................................................)

7) ‘கடலலை காலைத்தழுவி விட்டுப்போவதைப் பார்’ என்ற வாக்கியத்தை பன்மை வாக்கியமாக எழுதுக. (.......................................................)

02) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1) அழுத பிள்ளை பால் குடிக்கும். (.......................................................)

2) உப்பிட்டவரை உள்ளளவும் நினை. (.......................................................)

03) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுங்கள்.

1) உலகின் முதலாவது .............................................ஸ்புட்னிக் ஆகும்.
(செயற்கைக்கோல், செயற்கைக்கோள், சேர்கைக்கோல், சேர்க்கைக்கோள்)

2) உடல் ஆரோக்கியத்திற்கு .............................................சிறந்தது.
(மூளிகைத் தைலம், மூலிகைத்தைளம், மூழிகைத் தைலம், மூலிகைத் தைலம்)

04) பின்வரும் கருத்துக்களுக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.

1) நகையும் பரிகாசமும் பொருந்தக் கவி புனையும் ஆற்றல் படைத்தவர். (.......................................)

2) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்துணர்வும் (.......................................)

05) வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை எழுதுக.



1) I love my.........................................



2) Open the .........................................

06) பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) I am sorry (.......................................................................)

07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1) நீங்கள் எங்கே போகின்றீர்கள். (.......................................................................)

08) இதன் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) ஒயாகே நம மொக்க (dh) த? (.......................................................................)

09) "நான் போய் வருகின்றேன்" என்பதைச் சிங்களத்தில் கூறப்படுவதைத் தமிழில் எழுதுக.

(.......................................................................)

**10 - 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

10) இலைகளைக் கொண்டிராத தாவரம் பின்வருவனவற்றுள் எது?
1) நாகதாளி 2) கற்றாளை 3) பூம்புல் 4) முட்செடி

11) சூரியகாந்தி பூவை ஒத்த பூவைக்கொண்ட தாவரம் எது?
1) தாமரை 2) அந்தூரியம் 3) மூக்குத்திப்பூண்டு 4) கொன்றை


12) வீட்டுத்தோட்டத்தில் வளரும் நாருரு வேரைக் கொண்ட தாவரம் எது?
1) பப்பாசி 2) ஆனைக்கொய்யா 3) இறம்பை 4) பசளி

13) ஒருவ்ருக்கு ஒரு குளவி கொட்டினால் செய்யக் கூடிய முதலுதவி எது?
1) காயத்தைச் சவர்க்க்ார நீரினால் நன்றாகக் கழுவுதல்
2) கொடுக்கை அகற்றிய பின் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல்
3) கை மருந்தை காயத்தின் மீது பூசுதல்
4) கொடுக்கை அகற்றிய பின் கை மருந்தைப் பூசுதல்

14) வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது கொள்ளைநிலைத் தாக்கத்தை ஏற்படுத்தும் நோய்,
1) மலேரியா 2) டெங்கு 3) வாந்திபேதி 4) பிடிசுரம்

15) பலாப்பழம் வெட்டும் போது கையில் பூசப்படும் பதார்த்தம் எது?
1) நீர் 2) ஆமணக்கு எண்ணெய் 3) தேங்காய் எண்ணெய் 4) தேப்பன் தைலம்

16) ஒருவர் தனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரமொன்றின் பிரதியொன்றைப் பெறுவதற்கு முதலில் செல்ல வேண்டிய இடம் எது?
1) கிராம அலுவலகம் 2) மாநகர சபை 3) பிரதேச செயலகம் 4) சமாதான நீதவான்

17) 

இந்த அடையாளத்தைக் காணக்கூடிய இடம் எது?
1) தேசியக் கொடி 2) பௌத்த கொடி
3) தேசிய இலச்சினை 4) தேசிய முத்திரை

18) பண்டைய இலங்கையின் வரலாறு பற்றிக் கூறும் நூல் எது?
1) திரிபீடகம் 2) வேதாகமம் 3) மகாவம்சம் 4) சூலதீபம்


19) தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் சத்தத்தை நிறுத்தும்போது, தோன்றும் அடையாளம் எது?




20) இலங்கையின் தேசப்படத்திலே நதிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் நியம நிறம்?
1) நீலம் 2) சிவப்பு 3) பச்சை 4) கறுப்பு


21) மாம்பட்டை, மருதம்பட்டை, வௌவாலோடிய தென்னம் பட்டை................என்ற கிராமிய பாடலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?
1) சடுகுடு 2) கிட்டிப்புள் 3) பாண்டியாட்டம் 4) கபடி



22) 

எதிரேயுள்ள நட்சத்திர கோலத்தைக் குறிக்கும் பெயர் என்ன?
1) வேட்டைக்காரன் 2) விருட்சகம்
3) பெருநாய் 4) கலப்பை


23) அழுகிய முட்டையொன்றைத் தூயநீரில் இடும்போது, முட்டையின் அமைப்பினைச் சரியாகக் காட்டும் உரு எது?




24) பாக்கை இலகுவாக வெட்டுவதற்குப் பாக்குவெட்டியில் பாக்கை வைக்கும் இடத்தைக் காட்டும் உரு எது?





25) நீரிலுள்ள பாத்திரத்தினுள் மண்ணெண்ணெய், தேங்காயெண்ணை என்பவற்றை இடும்போது, அவதானிக்கக் கூடியவை,




26) குடற்புழுக்காக அருந்த வேண்டிய மருந்தை உட்கொள்ள முன்பு, அவதானிக்க வேண்டிய முக்கிய விடயம் எது?
1) காலாவதியாகும் திகதி 2) ஒருவேளை அருந்த வேண்டிய அளவு
3) உற்பத்தி செய்த திகதி 4) மருந்தில் அடங்கியுள்ளவை

27) தினமும் உணவில் மஞ்சள் நிறக் காய்கறி வகைகளை உட்கொள்வதால் தடுக்கக் கூடிய நோய் எது?
1) கண்டமாலை 2) மாலைக்கண் 3) அனிமியா 4) பெரிபெரி

28) மங்கள விழாக்களின் போது, இசைக்கப்படும் வளி நிரல் அதிரும் இசைக்கருவி.




29) பண்டைய மக்களின் கலாசார, பண்பாட்டு அம்சங்கள் காணப்படும் இடம் எது?
1) சிகிரியா 2) தம்புள்ள 3) பொலந்றுவை 4) காலி

30) வெயில் காலங்களில் அதிகளவு உண்ணும் பழவகை எது?
1) வெள்ளரி 2) மாம்பழம் 3) கொய்யா 4) அப்பிள்

31) இலங்கையில் கண்டிக்கால செதுக்கல்களில் ஒன்றான மகரதோரணத்தில் காணப்படும் பின்வரும் உருவங்களின் பெயர்களை எழுதுங்கள்.



31. (......................) 32. (......................)

விசேட வினாத்தாள் II - தரம் 05 - 2012 - கல்விமுரசு

# குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு மக்கள் பொலிஸாரையும் அணுகலாம்

## - பொலிஸ் அதிகாரி ஜெயந்த



(கிருஸாந்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்ற பிரச்சினைகளுக்கு சிவில் பாதுகாப்புக் குழுக்கள் தீர்வுகளை வழங்கியுள்ளநிலையில், இந்தக் குழுக்கள் மூலம் தீர்வுகிடைக்க வில்லை எனின், பொலிஸ் நிலையத்தினை அணுகி தங்களுடைய பிரச்சினைகளை பொது மக்கள் தீர்த்துக் கொள்ளலாம் என பொலிஸ அதிகாரி ஜெயந்த தெரிவித்தார்.


யாழ். பொலிஸாரினால் செயற்படுத்தப்பட்டு வரும் கிராமிய சிவில்பாதுகாப்புக்குழுவின் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் இடம்பெற்று வரும் குற்றச்செயல்கள் தொடர்பாகவும், இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பாக சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொடர்பாகவும், ஆராயப்பட்டதுடன், இதற்கான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுவில் ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் 25 பொது மக்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், இந்தப் பொது மக்களில் ஒருவரை குழுத்தலைவர் ஆக தெரிவு செய்து அந்த குழுவுக்கு பொலிஸ் நிலையத்தால் நான்கு பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப பட்டுள்ளனர். எனினும் இந்தக் குழு விசாரணைகளை மேற்கொண்டு சுமுகமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கின்ற போதிலும், இவர்களால் குற்றத்துக்காக தண்டனையை வழங்கமுடியாதென அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது 1000 திற்கு மேற்பட்ட கிராமிய சிவில்பாதுகாப்பு குழுவின் உறுப்பினர்கள் பங்கு கொண்டு தமது கிராமத்தில் நடைபெறும் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

யாழ் பிராந்திய பிரதி பொலிஸ அத்தியட்சகர் அபேசிங்க பண்டார, பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பொலிஸ் உயர் அதிகாரிகள், கிராமியசிவில்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்டத்தில் கிராமங்களில் நடைபெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்குடன், யாழ்.மாவட்ட பொலிஸ்நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய சிவில்பாதுகாப்பு குழுவின் அங்கத்தவர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (சி)



## ஆரியகுளம் வாய்க்கால்பகுதி துப்புரவாக்கும் பணிகள்



(கிரு)

யாழ்.ஆரியகுளப் பகுதியிலுள்ள வாய்க்கால் மாநகரசபை சுகாதாரப் பிரிவால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

நான்கு மீற்றர் அகலமான இந்த வாய்க்காலில் காணப்படுகின்ற குப்பைகள் மற்றும் புல்பூண்டுகள் அகற்றும் துப்புரவுப்பணி சில நாட்களாக நடைபெற்று வருகிறது. அதுமட்டுமன்றி வாய்க்காலின் வெடித்த சுவர்ப்பகுதியும் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றது. யாழ்.நகரை அழகுபடுத்தும் நோக்குடனேயே இந்தப் பணி மேற்கொள்ளப்படுவதாக மாநகர சபை சுகாதாரப் பிரிவின் மேற்பார்வையாளர் தெரிவித்தார். (சி)

## திருநெல்வேலியில் இளம் யுவதி தூக்கிட்டுத் தற்கொலை

(சுதா)

திருநெல்வேலி- தாளையடிப் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் தனது வீட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

19 வயதுடைய இளம் யுவதியே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் குறித்த யுவதி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும், பெற்றோருக்கு கடன் தொல்லை அதிகமானதாலேயே இந்த யுவதி தற்கொலை செய்துகொண்டதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

குறித்த யுவதியின் தற்கொலை தொடர்பில் தற்போது யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட உயிரிழந்த யுவதியின் குடும்பத்தினர் தற்போது தாழையடி வீதியில் ஒரு வாடகை வீட்டிலேயே வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)



வர்ணம் பூசி அழகுபடுத்தப்படும் யாழ். போதனாவைத்தியசாலையின் உட்பக்க கட்டடத் தொகுதினைப் படத்தில் காணலாம். (சி)

# மெய்தான் பாருங்கோ...

## விரயமாக்காப் பொருள்கள்



அண்டைக்கொருக்காப் பாருங்கோ ரவுணுக்குள்ள ஒரு ரோட்டால போய்க் கொண்டிருக்கேக்கை றோட்டுக் கரையோரமா ஒரு தண்ணிப் பைப்பிலயிருந்து தண்ணி அநாவசியமாக ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டனான்.

ஆரோ பைப்பில தண்ணியை எடுத்திட்டு, மேல் சுழல்மூடியை மூடாமல் விட்டிட்டுப் போட்டினமெண்டது விளங்கிச்சுது எனக்கு. சில இடங்களில சொட்டுத்தண்ணிக்கு; ஒரு குடம் தண்ணிக்கு சனங்கள் எவ்வளவு கஷ்டப்படுகுதுகள் எண்டது உந்த ஓசித்தண்ணி எடுக்கிற ஆட்கள் கொஞ்சம் கூடப் புரிஞ்சு கொள்ளுகினமில்லைப் பாருங்கோ!

எங்கயெண்டாலும் ஓசியெண்டால் உதாசீனம்தானே! எதுவும் உடம்பை வருத்திக் கஷ்டப்பட்டால்தான் அதன் அருமை; பெருமை தெரியும் பாருங்கோ!

நாங்கள் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து செட்டிகுளம் அகதிமுகாமில இருக்கேக்கை தண்ணிக்கு எவ்வளவு கஷ்டப் பட்டனாங்கள் எண்டது தெரியுமே?

விடியப்புறம் மூண்டு மணிக்கே குழாய்க்கிணத்தடியில வாளியள், கானுகளை வைச்சிட்டுக் காவலிருந்தால், தண்ணி எடுத்து தகரக் கொட்டகைக்குள்ள போக பகல் பத்து மணியாகியிடும் பாருங்கோ. எத்தனை நாள்.... எத்தனை முறை.... ஒரு குடம் தண்ணிக்காக குழாய்க்கிணத்தில சனங்கள் அடிபுடிப்பட்டு பொலிசுக்கெல்லாம் போய் வந்ததுகள்.

இதை விட வேதனையான ஒரு விசயம் என்ன தெரியுமே?

முள்ளிவாய்க்காலிலருந்து ஆமியின்ர கட்டுப்பாட்டுக்குள்ள போனாப்போல எல்லாருக்கும் நல்ல தண்ணித்தாகம் கண்டியளே! நல்ல மத்தியான வெயிலுக்கை வந்து அம்பிட்டுப் போனம் பாருங்கோ. அவரவர் அம்பிட்ட சாமான் சக்கட்டை தூக்கிக்கொண்டு ஓடி வந்தாலும், பெரும்பாலான ஆக்கள் பாத்திரங்கள் எண்டு எதையும் கொண்டுவரேல்லை. சொப்பிங் பை வைச்சிருந்த ஆட்கள் ஏதோபோய் ஒரு குளத்தில தண்ணி எடுத்துக் கொண்டு வந்தினம்.

என்ர பிள்ளைக்கும் தண்ணிவிடாய்க்கத் தொடங்கியிருக்க வேணும். அவளும் தண்ணியெண்டு கேட்க என்ர மனிசி றவலிங்பாய்க்குள்ள கிடந்த ஒரு சொப்பிங் பையை எடுத்துத் தந்தாள். நானும் அதைக் கொண்டு போய் குளத்தில கலங்காத இடமாப்பார்த்து தண்ணிய எடுக்க,சொப்பிங்பை அடிப்பக்கமா பிரிஞ்சு அப்பளத்துண்டுகள் மாதிரிப் போச்சுது. அதுக்குப் பிறகுதான் தெரிஞ்சுது எனக்கு சொப்பிங் பழசு எண்டு.

எனக்கு அந்த இடத்தில என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. உடனே சண்டிக்கட்டை அவிட்டு சாரத்தின்ர பெரும் பகுதியை குளத்து தண்ணியில நனைச்சுப் பொத்திப்பிடிச்சுக்கொண்டு வந்து, என்ர பிள்ளையின்ர வாயை ஆ... வெண்டு திறக்கப்பண்ணிப்போட்டு சொட்டுச்சொட்டாக பிள்ளையின்ர வாய்க்குள்ள பிழிஞ்சு விட்டனான் பாருங்கோ.

நான் இதில வந்து இதைச்சொல்லேக்கை சிலபேருக்கு கொடுப்புக்கை சிரிப்பு வரும் கண்டியளே! நெருப்பால சூடு வாங்கினவனுக்குத்தான் வலி தெரியுமேயொழிய, சுட்டவனுக்கும் மருந்து கட்டுறவனுக்கும் அதன் தாற்பரியம் கடைசி வரையும் விளங்காது பாருங்கோ.

இப்பிடியான அவலங்களையும் அனுபவங்களையும் நாங்கள் எங்கட வாழ்க்கையில சுமந்து கொண்டு திரியேக்கை, றோட்டில தண்ணி வீணாப் போறதை கண்டவுன எனக்கு முள்ளிவாய்க்காலில குழம்பின குட்டை நீர்க்குளம்தான் ஞாபகத்துக்கு வந்தது. ஓசியெண்டாப் போல எல்லாத்தையும் உதாசீனப்படுத்தக்கூடாது. எங்களுக்கு இப்ப பயன்படாத பொருளுகள், நாளைக்கு இன்னொருவருக்கு பயன்படுமல்லோ! அதைக் கொஞ்சம் எல்லாரும் யோசிக்கவேணும்.

இதைவிட இன்னொரு விசயத்தையும் சொல்லவாறன். பக்கத்தில இந்திய நாட்டில மகாராஷ்ரா மாநிலத்திலயுள்ள டோலாரா எண்ட பழங்குடி கிராமத்தில பாருங்கோ இப்பசரியான தண்ணிப்பஞ்சம் ஏற்பட்டிருக்குதாம்! இந்தக் கிராமத்தில 37 வயதான ஒரு பொம்புளை தண்ணிக்கு அலைஞ்சு திரிஞ்சு, கடைசியில தண்ணியில்லாமல் வெய்யிலத்துக்குள்ளால வீட்டை போகேக்கை தண்ணித்தாகம் தாங்கேலாமல் மயங்கி விழுந்து செத்துப்போச்சுதாம்.

இப்படியும் உலகத்தில நடக்க, நாங்கள் இஞ்சை என்னடாவெண்டால் ஓசித்தண்ணியெண்டிட்டு வீணா ஓடவிடுகிறம். இப்பிடியே வீணாக ஓடவிட்டமெண்டால் பிறகொரு நாளேலே குடங்களையும் கொண்டு தெருத்தெருவா, வீடுவீடாக தண்ணிக்கு ஓடவேண்டிய ஒரு காலம் எமக்கும் உருவாகிவரும் எண்டதை மறந்து போகாதையுங்கோ!.

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# பிரம்மபுத்திரா நதியில் படகு கவிழ்ந்து 200 இற்கும் மேற்பட்டவர்கள் பலி



(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தின் பிரம்ம புத்திரா நதியில் சுமார் 300 பயணிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், உயிரிழந்த 103 பேரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும், 100 பேரைக் காணவில்லையென வும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை படகு மூழ்கியவேளை அதிலிருந்து கடலுக்குள் குதித்தவர்களில் 25 பேர் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

அசாம் - துப்ரி பகுதியிலிருந்து ஹத்சிங் கிமரி பகுதிக்கு செல்வதற்காக, 250 முதல் 300 பேர் வரை ஒரு படகில் சென்றனர். பகிர் கஞ்ச் அருகே, பிரம்ம புத்திரா ஆற்றில் படகு சென்ற போது, எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 200 இற்கும் மேற்பட்டோர் தண்ணீரில் மூழ்கிப் பலியானதாக அஞ்சப்படுகிறது. இவர்களை தேடும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இரட்டை அடுக்குகள் கொண்ட இப்படகு கடும் காற்று, மழைக்கு மத்தியில் பிரம்மபுத்திரா நதியில் பயணம் செய்துகொண்டிருந்த போது கவிழ்ந்துள்ளது.

அசாம் மாநில பொலிஸார், எல்லைப் பாதுகாப்புப் படையினர்களின் உதவியுடன் மீட்பு பணிகளில் விரைவாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இச்சம்பவம் எனக்கு மிகவும் அதிர்ச்சியளிக்கிறது, என்னுடைய மிகுந்த இரக்கங்களையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரம்மபுத்திரா நதியில் இது போன்ற விபத்து நடந்திருப்பது இதுவே முதல் முறையாகும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளும், நிவாரணங்களும் முழுமையாக வந்து சேரும் என அவர் உறுதியளித்துள்ளார்.




மதுரை ஆதீனத்தின் 293 ஆவது சன்னிதானமாக நித்தியானந்தா தெரிவு செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்து அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்துவதனைக் காணலாம்.

# சியாச்சின் பனிமலைப் பகுதியில் இராணுவத்தை குறைக்கப் பேச்சு

(புதுடில்லி)

சியாச்சினில் இராணுவ பலத்தைக் குறைப்பது தொடர்பாக பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தபடும் என இராணுவ அமைச்சர் அந்தோனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கூறியதாவது, காஷ்மீர் சியாச்சின் பனி மலைப் பகுதியில் கடந்த ஆண்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்களில் 26 பேர் இறந்தனர். இப்பகுதியில் இராணுவ பலத்தைக் குறைப்பது தொடர்பாக இந்திய, பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலர்கள் தரப்பில் 12 முறை பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஒரு முடிவு ஏற்படும் வரை, பேச்சு தொடரும் இருதரப்பிலுமே இந்தப் பேச்சுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

என்.சி.சியை பலப்படுத்தும் வகையில், புதியதாக இரண்டு இலட்சம் பேர் சேர்க்கப்பட்டு, 15 இலட்சமாக உயர்த்தப்படும். இவ்வாறு இராணுவ அமைச்சர் அந்தோணி கூறினார்.

# மாம்பழத்திற்கு முதல்வரின் பெயர்



(லக்னோ)

உத்தரப் பிரதேசத்தில் புதிய முதல்வராக பதவியேற்றுள்ள அகிலேஷ் யாதவ் பெயரை, மாம் பழத்திற்கு சூட்டியுள்ளார் அம்மாநில தோட்டக்கலை நிபுணர் கலிமுல்லா கான்.


இதுகுறித்து அவர் கூறுகையில்,

இதற்கு முன்னர் மாம் பழங்களுக்கு, கிரிக்கெட் வீரர் சச்சின், நடிகை ஐஸ்வர்யா ராய், சோனியா ஆகியோர் பெயர் களை வைத்தேன்.

தற்போது, உத்தரப் பிரதேசத்தில புதிய முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள அகிலேஷ் யாதவின் பெயரை, புதிய ரக மாம்பழத்திற்கு வைத்துள்ளேன் என்றார். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, இவ்வகை மாம்பழங்கள் ஒவ்வொன்றும் ஒரு கிலோ நிறையுடையவை. இவை பழுத்தவுடன், முதல்வரிடம் பரிசாக வழங்கவும் கலிமுல்லா கான் திட்டமிட்டுள்ளார்.




# ராஜிவ் கொலையாளிகள் வழக்கு உச்ச நீதிமன்றுக்கு மாற்றம்




(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேறிவாளன், சாந்தன் ஆகியோர் தாக்கல் செய்த கருணை மனுக்கள் தமிழகத்தில் இருந்து உச்சநீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த மனுக்களை தமிழக நீதிமன்றத்தில் இருந்து மாற்ற உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. முன்னதாக இவர்களின் கருணை மனுக்களை உச்சநீதிமன்றம் நிராகரித்திருந்தது.

தங்களின் கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க குடியரசுத் தலைவர் 11 ஆண்டுகள் எடுத்துக் கொண்டதால் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்திவைக்க வேண்டும் என்று 3 பேரும் முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 15 இலங்கை அகதிகள் ஒரு மாதத்தில் விடுதலை

(சென்னை)

தமிழகம், செங்கல்பட்டு இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் சிறைவைக்கப்பட்டுள்ளவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்துள்ள நிலையில், அவர்களில் 15 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது.

செங்கல்பட்டு அகதிகள் முகாமில் இலங்கைத் தமிழர்கள் 100 இற்கும் மேற்பட்டோர் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

தங்களை விடுதலை செய்யக்கோரி கடந்த 17 ஆம் திகதி முதல் ஈழத்தமிழர்கள் விக்ரம சிங்கம், அருள் குலசிங்கம், சதீஷ்குமார், சிவக்குமார், நாகராசு, பாரபரன், நந்தகுமார், ஜெயராமன், சேகர், சுதர்சன் உட்பட 14 பேர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் செங்கல்பட்டு முகாம் தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்ற அரசு, ஒரு மாதத்திற்குள் 15 பேரை விடுதலை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளது.

# கைப்பேசியை மின்னேற்ற காற்றின் மூலம் மின்சாரம்



(பரமக்குடி)

பரமக்குடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காற்றில் இருந்து மின்சாரம் தயார் செய்து அதன்மூலம் கைப்பேசியை மின்னேற்றம் செய்து வருகிறார்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் பீட்டர்ஜான். எலெக்ரிக்கல் பணி செய்து வரும் இவருக்கு புதுக் கண்டுபிடிப்புகளை தயார் செய் வதில் தனி ஆர்வம்.

தற்போது அவர் காற்றிலிருந்து மின்சாரம் உருவாக்கி அதன்மூலம் கைப்பேசியை மின்னேற்றச் செய்யும் கருவியை கண்டு பிடித்துள்ளார். இந்த கைப்பேசி மின்னேற்றக் கருவியை பயணத்தின் போது ஜன்னல் ஓரம் வைத்தால் போதும். ஜன்னல் வழியாக வரும் காற்று, கைப்பேசி மின்னேற்றத்தில் உள்ள விசிறியைச் சுற்றும். அந்த விசிறி மின்சாரம் உற்பத்தி செய்யும் டைனமோவை சுற்றும். டைனமோ சுற்றுவதால் ஏசி மின்சாரம் உற்பத்தியாகிறது.

கைப்பேசி டிசி மின்சாரம் மூலமே மின்னேற்றம் செய்யமுடியும். இதையடுத்து கிடைக்கும் ஏசி மின்சாரத்தை டிசி மின்சாரமாக மாற்ற சிறிய டையோடு பயன்படுத்தப்பட்டு இந்த மின்னேற்றம் நடைபெறுகிறது.

# ஜனாதிபதி வேட்பாளர் நியமனம்; காங்கிரஸை ஆதரிக்காது பா.ஜ.க.

ஜனாதிபதித் தேர்தலில் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி உட்பட காங்கிரஸ் கட்சி அறிவிக்கும் வேட்பாளரை ஆதரிக்க மாட்டோம் என பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புதுடில்லியில் எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் கூறியதாவது,

வரும் ஜனாதிபதித் தேர்தலில் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி உட்பட காங்கிரஸ் கட்சி அறிவிக்கும் எந்த வேட்பாளரையும் ஆதரிக்க மாட்டோம். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக காங்கிரஸ் கட்சியுடன் எந்தவித ஒப்பந்தமும் செய்யவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்தால், துணை ஜனாதிபதி பதவியை எங்களுக்கு விட்டு கொடுக்கும் என்ற வகையில் ஒப்பந்தம் ஏதும் செய்யவில்லை. காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஜனாதிபதி பதவிக்கு அப்துல் கலாமை வேட்பாளராக நிறுத்தினால் அதனை பா.ஜ. வரவேற்கும். தேர்தலில் போட்டியிட கலாம் சம்மதிக்க வேண்டும். காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளரை நாங்கள் ஆதரிப்போம். அவர்களும் நாங்கள் நிறுத்தும் துணை ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பார்கள் எனத் தெரிவித்தார்.

## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

அ.தர்ஜனா

அகவை 10 இல்...

சிறாரின் பெயர் : ...........................

முகவரி : ...........................

பிறந்த ஆண்டு : ...........................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# காணாமல் போன கனவுக்கன்னிகள்

**'கனவுக்கன்னி**. என்று எழுதும் போதே ஒரு விஷயம் மனதை நெருடுகிறது. கனவில் வரும் பெண்கள் கூட, கன்னிகளாகத்தான் இருக்கவேண்டும் என்ற நமது கற்பு அபிமானம் என்னைப் புல்லரிக்க வைக்கிறது. ஆங்கிலத்தில் 'ட்ரீம் கேர்ள்' என்று தான் குறிப்பிடுகிறார்கள். 'ட்ரீம் வேர்ஜின்' என்று யாரும் கூறுவதில்லை.


ஆனால் தமிழில் மட்டும், கனவில் வந்து வெள்ளை உடையில் சும்மா 'லல்லலா..."பாடுவதற்குக்கூட கன்னியாகத்தான் இருக்கவேண்டும் என்று அடம் பிடிக்கிறார்கள். இத்துடன் கனவுக்கன்னிகள் கட்டாயம் ஒரு நடிகையாகவும் இருக்கவேண்டும். ஆனால் இந்தக் கனவுக்கன்னிகளின் இடமோ நிரந்தரமல்ல.

சென்னை கபாலீஸ்வரர் கோயிலில் ஒரு முன்னாள் நடிகையைப் பார்த்தேன். ஒரு காலத்தில் தனது கட்டுடலுக்கும், பொலிவான முகத்திறகும் பெயர் பெற்ற நடிகை அவர். இப்போது அவருக்கு அறுபது வயதுக்கு மேல் இருக்கும். காலம் அவரின் அழகை கரைத்துவிட்டு, நைந்து போன உடலை மட்டும் விட்டு வைத்திருந்தது.

ஆயிரமாயிரம் இளைஞர்களின் இரவுகளில் கனவுகளை விதைத்த அந்த அழகின் ஒரு துளி மிச்சத்தை யாவாது பார்த்துவிட முடியாதா என்பது போல், அந்நடிகையை உற்று உற்றுப் பார்த்தேன். தளர்ந்த உடல்... முதுமையேறிய முகம்... சுருங்கிய தோல்... ஒட்டிய கன்னங்களுடன் அவர் அக்கம் பக்கம் பார்க்காமல், குனிந்த தலையுடன் வேக வேகமாக நடந்தார். அந்த நடை இயல்பாக இல்லை. தன்னை யாருக்கும் தெரிந்து விடக்கூடாது என்பது போல், ஒரு மெல்லிய பதட்டத்துடன், விறுவிறு வென்று நடந்த அவர் கோயிலை விட்டு வெளியேறினார்.

அவரை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. தனது அழகால் இலட்சக்கணக்கான ஆண்களை வசீகரித்து வைத்திருந்த அந்தப் பழைய தோற்றம் இப்போது அவரிடம் இல்லை. இந்த முதிய கோலத்தில் தன்னை யாரும் அடையாளம் கண்டுகொள்வதை அவர் நிச்சயம் விரும்பியிருக்க மாட்டார்.

வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. இறந்த காலத்தின் தேவதைகளைப் பலி கொண்ட நிகழ்காலம், அழகின் ரத்தத்தை தன் மேனியெங்



கும் பூசிக் கொண்ட ஒரு அரக்கன் போல் நின்று கொண்டிருக்கிறது.

இந்த கனவுக்கன்னிகள் எப்படி உருவாகிறார்கள்?


ஒரு சிறுவன் தனது தந்தையை ஜென்ம விரோதி போல் பார்க்க ஆரம்பிக்கும்போது, அவன் வயதுக்கு வந்துவிட்டான் என்று அர்த்தம். அடுத்து அவன், தன்னைச் சுற்றியுள்ள பெண்களை வேறு விதமாக பார்க்கத் தொடங்குகிறான்.

ஆனால், மூன்று மாதம் மூத்த பெண்ணைக் கூட 'அக்கா' என்று அழைக்க வைக்கும் சதிகாரர்கள் நிறைந்த இத்தேசத்தில், ஒரு கனவுக கன்னியைத் தேர்ந்தெடுப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

எனவே ஒரு ஆண் மனதிற்குள் தனக்கான கனவுக்கன்னியை தேடிக் கொண்டேயிருக்கிறான். நிஜ வாழ்வில் கனவுக்கன்னிகளை சந்திக்காத போது, திரை பிம்பங்கள் உயிர்த்தெழுகின்றன. நடிகைகள் திரையிலிருந்து இறங்கி, ரசிகனின் கையைப் பிடித்துக் கொண்டு அவனுடனே செல்கிறார்கள்.

எனது முதல் கனவுக்கன்னி, இயக்குனர் சத்யஜித்ரே அவர்களால், 'உலகின் மிக அழகிய பெண்களில் ஒருவர்' என்று வர்ணிக்கப்பட்ட 'சலங்கை ஒலி' ஜெயப்ரதா. ஆம்... 'சலங்கை ஒலி' ஜெயப்ரதாதான். 'நினைத்தாலே இனிக்கும்' ஜெயப்ரதாவோ, '47 நாட்கள்' ஜெயப்ரதாவோ அல்ல. 'சலங்கை ஒலி' ஜெயப்ரதா மட்டுமே என் கனவுக்கன்னி.

அப்போது நான் ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தேன். அரியலூர், லட்சுமி தியேட்டரில் சலங்கை ஒலி



படம் ஆரம்பித்து, ஃப்ளாஷ்பேக் துவங்கும் வரை மனதில் ஒரு சலனமும் இல்லை. ஃப்ளாஷ்பேக்கில் ஒரு கோயிலில், கமலஹாசனை ஒரு சிறுவன் போட்டோ எடுத்துக் கொண்டிருப்பான். கமல் அப்போது மிகவும் சத்தமாக, "தா... தாரிகிடதாரிகிட... தை" என்று கத்தியபடி போஸ் கொடுக்க... மஞ்சள் கலர் பட்டுப்புடைவையில், கையில் கமெராவோடு திரும்பிப் பார்ப்பார் ஜெயப்ரதா. தேவதைகள் பூமியிலும் வாழ்வார்கள் என்பதை நான் அறிந்து கொண்ட நாள் அது.

எல்லா அழகான பெண்களும், ஒரு குறிப்பிட்ட கணத்தில் தங்கள் உச்சகட்ட அழகை அடைவார்கள். அவ்வாறு இப்படத்தில் ஜெயப்ரதா தனது உச்சகட்ட அழகை அடையும் காட்சி: ஒரு காரருகில் நின்றுகொண்டு ஜெயப்ரதா கமலிடம், 'மௌனமான நேரம்..' பாடலைப் பாடிக் காண்பிப்பார். பல்லவியை முடிக்கும் போது, திடீரென்று வெட்கம் வந்து, தோளைப் போர்த்தியிருந்த சிவப்பு நிறப் புடைவையால் லேசாக மூக்குக்குக் கீழ் முகத்தை மூடி, வெட்கத்துடன், ஒரு சிரிப்பு சிரிப்பார் பாருங்கள்... அந்த வெட்கச்சிரிப்பை அப்படியே கையில் பிடித்து, வாழ்நாள் முழுவதும் வைத்துக்கொள்ள முடிந்தால் எவ்வளவு

**- ஜி.ஆர்.சுரேந்திரநாத்**

நன்றாக இருக்கும்... ஒருவார காலத்தில், அப்படத்தை நான் மூன்று முறை பார்த்தேன். அதன பிறகு...

ஜெயப்ரதாவை தொடர்ந்து கனவுக்கன்னி ஸ்தானத்தில் தக்க வைப்பது மிகவும் கஷடமான காரியமாக இருந்தது.

நீங்கள் ரசிக்கும் ஒரு நடிகையின் படங்களை அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந்தால்தான், கனவுக்கன்னியின் ஸ்தானம் ஸ்திரப்படும். ஆனால் ஜெயப்ரதா தமிழ்ப்படங்களில் அதிகமாக நடிக்கவில்லை. எனவே வேறு வழியின்றி சில மாதங்களிலேயே, நான் வேறு கனவுக்கன்னியைத் தேடவேண்டியிருந்தது.

நடிகை ராதா ஏற்கனவே 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் அறிமுகமாகியிருந்தாலும், அப்போது நான் ஏழாவதுதான் படித்துக்கொண்டிருந்ததால், அப்போது ராதாவை கனவுக்கன்னியாக பார்க்கத் தெரியவில்லை. பிறகு 'டிக் டிக் டிக்' படத்தில், ராதா சிவப்பு நிற நீச்சல் உடையில் ஓடி வந்து என் இதயக் குளத்தில் குதித்த போது, மனதில் லேசாக ஒரு சலனம். இரண்டு ஆண்டுகளில் ராதா மேலும் பாலிஷாகி, 'ஒரு கைதியின் டைரி' படத்தில் பளிச்சென்று வந்து நின்ற போது முடிவெடுத்துவிட்டேன். ராதா தான் என் அடுத்த கனவுக்கன்னி.

ராதா போன்ற சற்றே கறுப்பான அழகிகளுக்கு ஒரு விசேஷத்தன்மை இருக்கிறது. சிவப்பழகிகள் எல்லாம், எட்டாத உயரத்தில் இருக்கும் மகாராணிகள் போல் தோன்ற... கறுப்பழகிகளை உங்கள் மனதுக்கு நெருக்கமாக உணரமுடியும். நானும் அவ்வாறே உணர்ந்தேன்.

'பாயும் புலி' படத்தில் மஞ்சள் நிற ஆடையுடுத்திக்கொண்டு, "பொத்துக்கிட்டு ஊத்துதடி வானம்" என்று மழையில் ஆடியபோது ராதா தனது அழகின் பரிபூர்ணத்துவத்தை எட்டியிருந்தார். இனிமேல் சாகும்வரை ராதாவை மட்டுமே நினைத்துக்கொண்டு, ஒரு ஏகக்கனவுக்கன்னி விரதனாக இருந்துவிடவேண்டும் என்று உறுதி பூண்டேன்.

ஏறத்தாழ இதே காலகட்டத்தில் விஜி, நளினி, அம்பிகா, ராதிகா, சுலக்ஷனா என்று எத்தனையோ நடிகைகள் ஃபீல்டில் இருந்தாலும், நான் மனதை அலைபாய விடாமல், எனது கனவுக்கன்னி ராதாவுக்கு உண்மையாகவே இருந்தேன்.

கடைசியில் ஒரு இந்தோ-ஐரோப்பிய கூட்டுச்சதியால், எனது ஏகக்கனவுக்கன்னி விரதம் கலைந்தது. ஒரு ஐரிஷ் நாட்டு தாய்க்கும், வங்காளத் தந்தைக்கும் கல்கத்தாவில் ஒரு பெண பிறந்தார். அந்தப் பெண் வளர்ந்து 'அமலா' என்ற பெயரோடு, எங்கள் ஊர் சக்தி தியேட்டருக்கு வந்தார். படம்: டி. ராஜேந்தரின், மைதிலி என்னைக் காதலி.

அந்த அழகிய பெண், "கண்ணீரில் மூழ்கும் ஓடம் நானே" என்று பாடியபோது, என் கண்களில் தண்ணி தண்ணியாக வந்தது. படம் முடிந்தவுடன், கனவுக்கன்னிப் பட்டத்தைத் தூக்கி அமலாவுக்கு கொடுத்துவிடலாமா என்று ஒரு யோசனை. ஆனாலும் மனசாட்சி உறுத்தியது.

ஆனால் அமலா வரிசையாக சத்யா, அக்னிநட்சத்திரம், ஜீவா, கொடி பறக்குது படங்கள் மூலமாக தமிழ் இளைஞர்களின் மீது ஒரு மாபெரும் தாக்குதலை நிகழ்த்தினார். அத்தனை பசங்களும் கவிழ்ந்தார்கள்.

'ஜீவா' படம் ரிலீசான அன்று, நான் தஞ்சாவூரில் என் பாட்டி வீட்டில் இருந்தேன். காலை எழுந்தவுடன் எனது மாமா பையன் தீனா, தினத்தந்தியில் 'ஜீவா' பட விளம்பரத்தைக் காட்டினான். அதில் அமலா நீச்சல் உடையில் ஓடிவரும் காட்சி. எழுந்து முகம் கழுவிக்கொண்டு, ராஜராஜன் தியேட்டர் வாசலில், நானும், தீனாவும் முதல் ஆளாய் நின்றோம்.

நேரமாக, ஆக... தினத்தந்தி பார்த்த ரசிகர்கள் வெள்ளம் போல் குவிந்து விட்டனர். வரிசையில் முதலில் நின்றிருந்த எங்களைக் கும்பல் நெருக்கித் தள்ள... எனக்கு மூச்சடைத்தது. ஒரு கட்டத்தில், நீச்சல் உடையில் அமலாவைப் பார்க்காமலேயே செத்துப் போய்விடுவோமோ என்ற பயம் வந்துவிட்டது. கவுண்ட்டரைத் திறந்து முதல் டிக்கெட்டை வாங்கியபோது, சொர்க்கவாசலுக்கே டிக்கெட் வாங்கியது போல் உணர்ந்தேன்.

படம் முடிந்து வெளியே வந்து, தஞ்சை ரயிலடி வாசலில் வைத்து, எனது கனவுக்கன்னி பட்டத்தை மனப்பூர்வமாக அமலாவுக்கு அளித்தேன்.


சிறிது காலத்திலேயே அமலா அலை ஓய... ஒரு விடுமுறையின்போது தஞ்சாவூரில் நானும், தீனாவும் பெரிய கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தோம். வழியில் சுவர்களில், 'மிஸ்டர் விஜய்' என்ற தெலுங்கு டப்பிங் பட போஸ்டர். அதில் நடிகர் வெங்கடேஷுடன் ஒரு பெண் ஒல்லியாக, வெளளையாக, அழகாக, கவர்ச்சியாக போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்படியே சைக்கிளைத் திருப்பி யாகப்பா தியேட்டருக்கு விட்டோம்.

பயங்கரமான அஜுடு குஜுடு தெலுங்கு மசாலாப்படம். மொத்தம் ஆறு டூயட் பாடல்கள். ஆறிலும் அந்த நடிகை, கண்களை அழகாகச் சிமிட்டிச் சிரித்தபோது, அடுத்த கனவுக் கன்னி தயார். நான் தீனாவிடம், ஒரு முன்னணி திரைப்படத் தயாரிப்பாளர், சக தயாரிப்பாளரிடம் கூறுவது போல், "இந்தப் பொண்ணு தமிழுக்கு வந்துச்சுன்னா, ஒரு ரவுண்டு வரும்." என்றேன். எனது தீர்க்கதரிசனம் விரைவில் பலித்தது. அவர் 'வருஷம் 16' படம் மூலமாக, ஒரே வாரத்தில், ஓல்டு கனவுக்கன்னிகள் அனைவரையும் ஓரம்கட்டினார். அந்த நடிகை... குஷ்பு.

இப்படத்தில் முகத்தில் ஒரு சின்ன சிணுங்கலுடன், "என் செயினத் தாங்க" என்று கார்த்திக்கிடம் கேட்கும் குஷ்பு... மிக மிக லேசாக, அரை வெளிச்சத்தில் ஒரு வெட்கத்தை காண்பிப்பார் பாருங்கள்...அட அட அடா...இந்த உலகம்தான் எவ்வளவு இனிமையானது.

தொடர்ந்து வெற்றி விழா, மைடியர் மார்த்தாண்டன், சின்னத்தம்பி... அண்ணாமலை... என்று ஏழெட்டு வருடத்திற்கு குஷ்புவை யாரும் அசைக்க முடியவில்லை. குஷ்பு மின்னிய காலம் ஓய்ந்தபோது, நான் குடும்பஸ்தனாகியிருந்தேன்.

கருணையே இல்லாத காலம்



வேகமாக ஓடி, எனது முன்தலை முடிகளை உதிர்த்துவிட்டு, எனது கனவுக்கன்னிகளை நாலாபக்கமும் சிதறடித்தது.

ஜெயப்ரதா, 'சலங்கை ஒலி' ஜெயப்ரதாவை அறியாத உத்தரப் பிரதேசத்தின் புழுதி படிந்த வீதிகளில், ராம்பூர் தொகுதியில் ஆஸம்கானை வீழ்த்துவதற்காக வியூகம் வகுத்துக் கொண்டிருக்கிறார். ராதா தனது மகளை கனவுக்கன்னியாக்க முயற்சித்து தோற்றுக் கொண்டிருக்கிறார். அமலா, நாகார்ஜுன் மனைவியாக ஹைதராபாத்தில் மிருகங்களின் நலனுக்காக நாட்களை செலவிட்டுக் கொண்டிருக்கிறார். தலைவர்கள் நிரம்பிய தமிழக அரசியலில், குஷ்பு தனக்கான இடத்தைத் தேடிக் கொணடிருக்கிறார்.

எனது நேற்றைய கனவுக்கன்னிகளில், இன்று வரையிலும் நான் தொடர்ந்து ரசித்துக் கொண்டிருக்கும் ஒரே நடிகை, 'சலங்கை ஒலி' ஜெயப்ரதாதான். சில வாரங்களுக்கு முன், டீன் ஏஜ் வயதில் நுழைந்து, என்னை ஜென்ம விரோதியாகப் பார்க்க ஆரம்பித்திருக்கும் எனது மகனும் என்னுடன் சேர்ந்து டிவிடியில் 'சலங்கை ஒலி' படத்தைப் பார்த்தான். ஃப்ளாஷ்பேக்கில் கோயிலில் அழகாகத் தோன்றும் ஜெயப்ரதாவைப் பார்த்தவுடன், "யார் இந்த நடிகை?"என்று கேட்டான்.




பேரணிக்குத் தயார்



ஜன சமுத்திரம்




வெற்றுக்கோஷம் விமோசனம் தராது, வீறுகொண்டு எழுவோம் வாரீர்!



கொழுத்தும் வெய்யிலிலும்



உழைப்பால் உரமேறிய...



பாட்டாளிகளின் கூட்டாளி




உரிமைக்கு குரல் கொடுக்க...



வரலாறு காணாத பேரணி

# புவி பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்



(திருநெல்வேலி)

புவியைப் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும். உலக புவி தினம் முக்கியமான தினமாகும். முதியோர் தினம், மகளிர் தினம், சுற்றுச் சூழல் தினம் என்பது மாதிரி புவி தினமும் முக்கியத்துவம் மிக்கதாகும். 1970 ஆம் ஆண்டளவில் அமெரிக்க மாணவன் ஒருவனால் ஆரம்பிக்கப்பட்டதே புவி தினம் எனத் தெரிவித்தார் பேராசிரியர் கே.குகபாலன்.

திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்பட்ட உலக புவி தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் இந் நிகழ்விற்குத் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரைநிகழ்த்திய பேராசிரியர் பல்வேறு வகையான இயற்கை அனர்த்தங்களினால் புவி வெப்பமடைகின்றது. இரண்டு, மூன்று தசாப்பதங்களாக ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றம் ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் பல்வேறு வகையான சிரமங்களை ஏற்படுத்துகின்றது.

மாலைதீவில் கடலுக்கடியில் உருவாக்கப்பட்ட இடத்தில் நாடாளுமன்றக் கூட்டம் நடைபெற்றுள்ளது. வெப்பநிலை பத்தாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு பாகை செல்சியஸ்சால் அதிகரிக்கிறது. நிலாவரைக் கிணற்றில் போடப்படும் ஒரு தேசிக்காய் கீரிமலைக் கடலை வந்தடைகிறது. யாழ்ப்பாணம் சுண்ணக்கலினால் உருவாக்கப்பட்டது. சுண்ணக்கல் நீரினால் அரிக்கப்பட்டு மாவாகிறது.

சில இடங்களில் கிணற்று நீருடன் மலக்கழிவுகள் கலக்கும் அபாயம் உள்ளது. 1988 ஆம் ஆண்டு பரிசோதனையின் போது இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் குடிநீர்ப் பிரச்சினை ஏற்ப டுகின்றது.

மரங்கள் அதிகம் நாட்டப்பட வேண்டும். மரங்கள் நிழல் தருபவை மட்டுமல்ல மழை வருவதற்கு, மண் வளத்துக்கு, வெப்பத்தைத் தணிப்பதற்கு, நீர் ஆவியாகாமல் தடுப்பதற்கு, மண் அரிப்பை நிறுத்துவதற்கு என பல் வகைகளில் அவை உதவி புரிகின்றன.

மழை வீழ்ச்சியின் அச்சுறுத்தல் உள்ளது. மழை வீழ்ச்சி குறைந்தால் வெப்பம் அதிகரிக்கும் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறும். பெரிய நகரங்களான நியூயோர்க், ரோக்கியோ போன்ற இடங்களில் ஏற்பட்டிருக்கும் பாரிய கைத்தொழில் புரட்சியினால் புகை மண்டலம் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் சூழல் பாதுகாக்கப்படுகின்றது. எமது நாட்டிலும் இவை பின்பற்றப்படுவதன் மூலம் எமது சூழலும் மாசடையாமல் இருப்பதற்கான வழிகள் ஏற்படுவ்தற்கு வாய்ப்புக்கள் அதிகம் எனக் கூறினார். (137)

## யுத்தம் செய்யாமல்...

இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

தன்னுடைய சொந்த மக்களை கொத்தணிக் குண்டுகளால் அடிக்கின்ற அரசு உலகில் இருக்கின்றதென்றால் அது ராஜபக்ஷவினுடைய அரசு தான். வாரத்திற்கு ஒரு முறை சந்தையில் ஒவ்வொரு பொருட்களுக்கு விலையை அதிகரிக்கிறார்கள். மே தினத்திற்கு முன்பதாக பாண் விலையைக் கூட்டினார்கள். இதற்கு அடுத்து என்ன செய்ய இருக்கின்றார்களோ எனக்குத் தெரியாது.

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களது சம்பளத்தைக் கூட்டுகிறோம் என்று கூறினார்கள். கடந்த நவம்பர் மாதத்தில் 109 ரூபா செலவழித்து ஒரு டொலரை வாங்கக் கூடியதாக இருந்து சில மாதங்கள் கழித்து 133 ரூபா செலவழித்தே ஒரு டொலரை வாங்க முடிகிறது. இதனால் பொருட்களின் விலைகள் அதிகரிக்கிறது

இந்தநிலையில், எப்படி நடுத்தர வர்க்கத்தினர் [illegible]ழைப்பாளர்கள் வாழ்வது அதனால்தான் நாங்கள் சொல்கின்றோம் தனியார் துறைகளிலும், அரச துறைகளிலும் அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதாவது 2011ஆம் ஆண்டு சம்பளத்தைக் கூட்டச் சொன்னபோது சம்பளத்தைக் கூட்டவில்லை. பணக்காரர்களது வரிச்சுமையை 33 இல் இருந்து 24 இற்கு குறைத்தார்கள் அரசாங்கத்திடம் நிதியில்லாமல் போனதுடன் எங்களது ஊழியர் சேமலாப நிதியில் இருந்து பணத்தை எடுத்துக் கொண்டனர். கடைசியில் மீனவர் ஒருவரைப் பலி கொடுத்துத்தான் அந்தத் திட்டத்தை நிறுத்தினோம்.

எண்ணெய் விலையைக் கூட்டியதுடன், தங்களுக்கு ஒத்துழைத்த அன்ரன் பெர்னாண்டோவைச் சுட்டுக்கொன்றார்கள். எனவே அரசாங்கத்திற்கு ஒன்றைக் கூறுகின்றோம். மக்களுக்கு இந்த வாழ்க்கைச் சுமையைக் கூட்ட முடியாது. வாழ முடியாத நிலையில் தவிக்கின்றனர். யூலை, ஒக்ரோபர் போன்ற மாதங்களில் இருக்கின்ற நிலையை விட மோசமான நிலை ஒன்று ஏற்படும். அதனால் தாங்கள் வீதிக்கு இறங்க வேண்டிவரும். அத்துடன் வடக்கிலே இருக்கின்ற மக்களை அவர்களது சொந்த இடங்களில் உடனடியாக மீள்குடியமர்த்துங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இம் மே தினப் பொதுக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, யோகராஜன், திருமதி விஜயகலா மகேஸ்வரன் திஸ்ஸ அத்த நாயக்க, நிமல்கா பெர்னாண்டோ ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மேலும் இந்நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, தே. வேலாயுதம், மங்கள சமரவீர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், சுமந்திரன், அப்பாத்துரை விநாயக மூர்த்தி மற்றும் எதிர்கட்சிகளின் உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், தொழிற்சங்கவாதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (பா)

## அரசியல் உரிமை...

சாத்தான் வேதம் ஓதுவது போல தமிழ் மக்களின் அவலங்கள் குறித்துப் பேசுகின்றன. உரிமை பற்றி பேசுகின்றன.

மே தினம் என்பது உழைக்கும் மக்களின் உரிமைக்கான தினம். இப்புனித தினத்தில் அதை உச்சரிப்பதற்கோ, ஊர்வலத்தினை நடத்துவதற்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எள்ளளவும் பொருத்தமற்றவர்கள்.

இவர்கள் மக்கள் மத்தியில் உணர்ச்சி பொங்கப் பேசிவிட்டு, கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரி யாகப் பயன்படுத்தாமல் எமது மக்களுக்கு அழிவுப் பாதையைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்கின்றார்கள்.

நாம் பிரிவினைவாதிகளும் அல்ல, இனவாதிகளும் அல்ல. எமது போராட்டம் தேச விடுதலைப் போராட்டம். தேசத்தில் நிலவுகின்ற ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும், சுய நிர்ணய உரிமைகளின் அடிப்படையில் எமது போராட்டத்தினை நடத்துகின்றோம்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அதை எமது மக்களுக்காகச் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் கிடைத்த அரசியல் தீர்வுக்கு மேலான எந்தத் தீர்வையும் இன்று வரை எமது மக்களுக்கு யாரும் பெற்றுக் கொடுக்கவும் இல்லை.

எமது இணக்க அரசியல் மூலம் நாம் பலவற்றை சாதித்துள்ளோம். எமது பாதையில் அழிவுகள் இல்லை. ஆக்கங்களே உள்ளன.

இது குறித்து சக அரசியல்வாதிகளுடனும் பகிரங்கமாக விவாதம் நடத்த நான் தயாராக இருக்கின்றேன்.

இன்றைய உழைக்கும் மக்களின் உரிமை தினத்தில் நான் பகிரங்கமாகவே இதனைக் கூறுகின்றேன்.

தனிநாடு கேட்டு, தமிழ் மக்களை உசுப்பேற்றிவிட்டு, தமிழ் நாட்டுக்கு தப்பிச் சென்று சொகுசாக வாழ்ந்த இரா.சம்பந்தன் ஆக இருக்கட்டும், மாவை சேனாதிராசாவாக இருக்கட்டும் இவர்களை நான் பகிரங்க விவாதத்திற்கு அழைக்கின்றேன்.

உழைக்கும் மக்களின் நலனுக்காக கூட்டமைப்பின் செயற்பாடுகள் எதுவும் திறம்பட நடந்ததாக இதுவரை வரலாற்றில் இல்லை.

அரசியல் உரிமைப் பிரச்சினை குறித்தும் மன விருப்பங்களோடு செயற்பட்டிருக்கவுமில்லை.

ஆனாலும், உரிமைகளை அடைவதற்கான எமது அரசியலுரிமைப் போராட்டம் தொடரும்.

எமது மக்களின் அழிவுக்குப் பின்னரும் நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வுக்கு, யாரும் வரவில்லை.

எமது தேசத்தின் வளங்களைச் சுரண்டுவதவதற்காக மீண்டும் வன்முறைச் சூழலை உருவாக்க முயற்சிக்கும் வெளித்தலையீடுகளை ஒரு போதும் நாம் ஏற்க முடியாது.

அபிவிருத்திக்கும் அன்றாட அவலங்களுக்கும் தீர்வு கண்டு எம் மக்களை விடிவுப் பாதைக்கு நாம் அழைத்துச் செல்வோம் என்றும் அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச அமைப்பாளர் மித்திரன், ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் உட்பட கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்,பா,26,137)

### புதுக்குடியிருப்பு-மந்துவிலில்

# இராணுவத் தளபாடங்கள் மக்களின் பார்வைக்கு

(முல்லைத்தீவு)

வன்னிப் பகுதியில் இடம் பெற்ற யுத்தத்தின் போது புலிகள் பயன்படுத்திய இராணுவத் தளபாடங்கள் மக்களின் பார்வைக்கு புதுக்குடியிருப்பு-மந்துவில் பகுதியில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

ஆயுதங்கள், விசைப்படகுகள், சிறைச்சாலைக் கூடுகள் என விடுதலைப் புலிகளின் ஆயுதத் தளபாடங்கள் வைக்கப்பட்டுள்ளன. இதனைப் பெரும் ஆர்வத்துடன் தென்பகுதி மக்களும், தமிழ்மக்களும் பார்வையிட்டு வருகின்றனர்.

அத்துடன், குறித்த பகுதியில் இராணுவத்தின் நினைவுத்தூபி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. மந்துவில் குளத்துக்கு நடுவில் ஒரு இராணுவ வீரன் இலங்கைத் தேசியக் கொடியினை தாங்கியவாறு நிற்பது போல இந்தத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. (02)

# கிளிநொச்சியில் மே தினம்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச சபையில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மே தினக்கூட்டம் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வேழமானிடன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஸ்ரீதரன், ஜனநாயகத் தேசிய மக்கள் முன்னணி கட்சித் தலைவர் மனோகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பெருமளவில் மக்கள் கலந்து கொள்ளவில்லை என எமது பிரதேச செய்தியாளர் தெரிவித்துள்ளார். (77)

## யாழ்.நகரில்...

யாழ். வேம்படிச் சந்தியை வந்தடைந்தனர்.

வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இருந்து புறப்பட்ட மக்கள் யாழ். வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் ஒன்றுதிரண்டு அணி வகுத்து யாழ்.வேம்படிச் சந்திக்கு ஊர்வலமாக வந்தடைந்தனர்.

அதேபோல தென்மராட்சி மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து அணி அணியாக வாகனங்களில் புறப்பட்ட மக்கள் யாழ்.ரயில் நிலையச் சந்தியில் ஒன்று கூடி அங்கிருந்து அணி வகுத்து யாழ்.வேம்படிச் சந்திக்கு வந்த டைந்தனர்.

இதனால் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் யாழ்.வேம்படிச் சந்தி ஜனசமுத்திரமாகக் காட்சியளித்தது. அங்கிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாபெரும் மே தின எழுச்சிப் பேரணி ஆரம்பமாகியது. மக்கள் அனை வரும் கோஷங்கள் எழுப்பியவாறும், சுலோக அட்டைகள் மற்றும் பதாதைகளைத் தாங்கியவாறும் எழுச்சிப் பேரணியில் அணி வகுத்துச் சென்றனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு நடத்திய இப் பேரணியின் இடையிடையே தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டத்தையும், அவர்களின் அரசியல் சிறப்புரிமைகளைச் சித்திரிக்கும் வகையிலுமான கருத்தோட்டம் மிக்க ஊர்திகள் நகர்ந்து சென்றன.

இவ்வாறு நகர்ந்து சென்ற பேரணி மாலை 4.00 மணியளவில் யாழ்.மாநகர திடலைச் சென்றடைந்தது. இந்த மைதானத்தின் நுழைவாயிலில் தரித்து நின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேரணியாகத் திரண்டு வந்த அனைவரையும் கை அசைத்து வரவேற்றார்.

மாலை 4.00 மணி தாண்டியதும் மேற்படி யாழ்.மாநகரத்திடல் மக்கள் வெள்ளமாக மாறியது. மைதானத்தின் அனைத்துப் பகுதிகளும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் கொடிகளாலும், வர்ணத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அலைமோதிய மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு படுத்தும் வேலைகளில் நூற்றுக் கணக்கான பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். தொடர்ந்து மேற்படி மாநகரத் திடலில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான அரங்கில் மாபெரும் எழுச்சிக்கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நடைபெற்றது.

அதேவேளை, எதிரணிக் கட்சிகளின் கூட்டு மே தினப் பேரணி ஒன்றும் யாழ்.நகரில் இடம்பெற்றது.

யாழ்.கைலாசப்பிள்ளையார் ஆலய முன்றலில் ஆரம்பமாகிய இப்பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உட்பட மேலும் பல ஐ.தே.கட்சியின் முக்கிய அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். இப்பேரணி கோவில் வீதியூடாகச் சென்று யாழ்.சென். றொக்ஸ் மைதானத்தை அடைந்தது.

இப்பேரணியில் சென்றவர்கள் சிங்கள மொழியில் கோஷம் எழுப்பியவாறும் சிங்கள மொழியில் அமைந்த பதாதைகள் பலவற்றைத் தாங்கியவாறும் சென்றனர். பச்சை வர்ணக் கொடிகளையும், யானைச் சின்னம் பொறிக்கப்பட்ட தலைக்கவசங்களையும் அணிந்திருந்தனர். இந்தப் பேரணியில் கலந்து கொண்ட அனேகமானவர்கள் தென்னிலங் கையில் இருந்து பஸ் வண்டிகளில் கொண்டு வந்து இறக்கப்பட்டவர்களாகவே இருந்தன்ர். இப்பேரணியின் நிறைவிலும் மேற்படி மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றது. (பா, எஸ், 26, 137)

## உழைப்பாளி...

வெற்றியின் பின்னால் இருந்து ஊக்க சக்தியாக செயற்படும் எமது நாட்டின் உழைக்கும் மக்களையே சாரும். அந்த வகையில் சர்வதேச தொழிலாளர் தினத்தின் வெற்றிகரக் கொண்டாட்டங்களில் பங்குபற்றும் சந்தர்ப்பம் எமது உழைக்கும் மக்களுக்குக் கிட்டியுள்ளது.

தற்போது நாடு சரியான நிலையான அபிவிருத்திப் பாதையில் செல்கின்றது. கிராமங்களும் நகரங்களும் வேறுபாடுகளின்றி சுபீட்சத்தை நோக்கி விரைந்து முன்னேறி வருகின்றன. அதேபோல் விவசாய நிலங்களுக்கும் வேலைத் தளங்களுக்கும் முறையான தேவையான கவனத்தை அரசாங்கம் செலுத்தி வருகின்றது. உழைக்கும் மக்களின் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி தொடர்பான தேவையான சட்டதிட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்காக அரசாங்கத்தின் முன்னேற்றகரமான கொள்கைகளின் பின்னால் வேறுபாடுகளை மறந்து அணிதிரண்டிருக்கும் எமது உழைக்கும் மக்களை நான் பெரிதும் மதிக்கின் றேன். இத்தகைய ஐக்கியம் நாட்டின் இறைமையை பாதுகாப்பதுடன் பொருளாதார வெற்றியையும் உறுதி செய்யும் என்பதை அவர்கள் மிகச் சரியாக விளங்கி வைத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# விபுலானந்தா இசைநடனக் கல்லூரியை இந்தியப் பல்கலையுடன் இணைக்க திட்டம்




கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜாவுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தாவுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் கிழக்குப்பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இச் சந்திப்பின் போது, கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் இந்திய அரசாங்கத்தினால் செய்யக்கூடிய உதவிகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடியதாக கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.

முக்கியமாக, கல்லடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்த இசைநடனக் கல்லூரியின் அபிவிருத்திகள் சார்ந்து இந்தியப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்திட்டங்களை மேற்கொள்ளல், அதன ஆசிரியர்களின் மேற்படிப்புகள், புலமைப் பரிசில்களை ஏற்படுத்தல், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தல், மற்றும் மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழகத்தின் கற்றல் மற்றும் ஏனைய தேவைகள் கருதி வாகன வசதிகளை ஏற்படுத்தித் தரல் ஆகிய விடயங்களை ஏற்படுத்தித் தருதல் தொடர்பில் கேட்டுக்கொண்டதாகத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்த், விபுலானந்த இசை நடனக கல்லூரியினை இந்தியப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைத் தான் மேற்கொண்டு தருவதாக உறுதியளித்தார்.

அத்துடன், ஆசிரியர்களின் மேற்படிப்புகள் புலமைப் பரிசில்கள் விடயத்தில் ஏற்கனவே உள்ள புலமைப்பரிசில்களில் விசேடமாக கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும், தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் தான் செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

அதேநேரம், மாணவர்கள் மறறும் பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு வாகனங்களை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் உறுதியளித்தார் என உபவேந்தர் தெரிவித்தார்.

அத்துடன், கனடாவிலிருந்து பல்வேறு வாய்ப்புகளையும் தவிர்த்து கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்து மிகுந்து சுறுசுறுப்புடன் செயற்படுவதற்கு உபவேந்தருக்கு வாழ்த்துத் தெரிவித்ததுடன், பல்கலைக்கழக அபிவிருத்தி தொடர்பில் விரிவான திட்ட அறிக்கை ஒன்றினைத் தனக்குத் தருமாறும் இந்திய உயர்ஸ்தானிகர் உபவேந்தர் கோபிந்தராஜாவிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# அவுஸ். குடிவரவு அமைப்பு இன்று இலங்கை வருகை



(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் பொவன், இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிககப்பட்டுள்ளது. இலங்கை வரும் அவர் நாளை மறுதினம் வரை இங்கு தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது அவுஸ்ரேலியாவுக்கு இலங்கையில் இருந்து செல்லும் அகதிகளை தடுப்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் கிரிஸ் பொவனுக்கு இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்ட அகதிகளின் நிலை தொடர்பில் ஆராய்வதற்கு கடப்பாடு உள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குறிப்பிட்டுளளன. இலங்கைக்கு திருப்பியனுப்பப்படும் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக மனித உரிமைகள் சட்ட நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பில் லிஞ்ச் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யும் கிரிஸ் பொவன், அவுஸ்ரேலியாவில் இருந்து திருப்பியனுப்பப்பட்டவர்களின் நிலை குறித்து ஆராய வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# சஜித்தின் கூட்டத்தில் அனோமா



கொழும்பு புதுக்கடையில் நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் சிரார்த்த தின நிகழ்வில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாவும் கலந்துகொண்டார். கங்காராம விகாராதிபதி வண கலபொட ஞானிஸ்ஸர தே[illegible] நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச, தயாசிறி ஜயசேகர, புத்திக பத்திரண, ஜயந்த கெட்டகொட, உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இதில் கலந்துகொண்டனர்.

# அறிக்கையை ஆராய 6 பேர் கொண்ட குழு

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து, அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடம் 6 பேர அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது. கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், தவிசாளர் பசீர் சேகுதாவூத், செயலாளர் ஹசன் அலி, பிரதிச் செயலாளர் நிஸாம் காரியப்பர் ஆகியோருடன் இரண்டு சட்டத்தரணிகள் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர். இந்த குழுவினர் ஒரு வாரத்தில் தமது அறிக்கையை கட்சியின் தலைமையிடம் கையளிக்க உள்ளனர். இதன் பின்னர் கட்சியின் தலைவர் ஹக்கீம் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான தமது நிலைப்பாட்டை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவார். நல்லிணக்க ஆணைக்குழுவின அறிக்கை தொடர்பான தமது நிலைப்பாடுகளை அறியத்தருமாறு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தனது கூட்டணிக் கட்சிகளுக்கு அறிவித்திருந்தது.

# பிரிட்டனின் அறிக்கைக்கு அரசாங்கம் விமர்சிப்பு

(கொழும்பு)

பிரித்தானிய அரசாங்கத்தின் மனித உரிமைகள் அறிக்கையில் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பான கரிசனைக்குரிய நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் உள்ளடக்கப்பட்டதை இலங்கை அரசாங்கம் விமர்சித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் மாத்திரமே கடந்துள்ள நிலையில் பொறுப்புடைமை விவகாரத்தில் இலங்கை போதுமானளவு செயற்படவில்லை என இலங்கை மீது குற்றம் சுமத்துவதற்கு பிரிட்டனுக்கு உரிமையில்லை என வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமால் பெரேரா கூறினார்.

நாம் போதுமானளவு செய்யவில்லை என அவர்கள் எப்படி கூறமுடியும்? எந்த அடிப்படையில் அவர்கள் அப்படி கூறுகிறார்கள்? கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை கடந்த வருடம் டிசம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நாம் போதியளவு ஆராயவில்லை என ஐக்கிய இராஜ்ஜிய அறிக்கையில் எவ்வாறு கூறமுடியும்? இப்போது நாம் அவற்றை ஆராய ஆரம்பித்துள்ளோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் சிலவற்றை ஏற்கெனவே அமுல்படுத்தப்படுகின்றன.

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக்கு பிரிட்டனும் பங்களிப்புச் செய்யும் என பிரித்தானிய அரசாங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மனித உரிமைகள் விவகார கரிசனைகளை ஆராய்வதில் இலங்கை அதிக விடயங்களை செய்திருக்கும்.

இப்போது மே மாதத்தில் இருக்கிறோம். ஒக்ரோபருக்கு இன்னும் நீண்டகாலம் உள்ளது. எமக்கு அவகாசம் உள்ள நிலையில், ஏற்கனவே நாம் பல விவகாரங்கள் தொடர்பாக பணியாற்ற ஆரம்பித்துள்ள நிலையில் அவர்கள் எம்மைப் பற்றி முன்கூட்டியே தீர்ப்பளிக்க முடியாது என பிரதியமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்தார்.

# ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 30 வீதம் பெறும் திட்டம் அமுல்

ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 30 சத வீத பணத்தை அதன் உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று முதல் அமுலுக்கு வரும் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். இதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியும் கிடைத்துள்ளது. 30 வீதமான பணத்தை பெற்றுக்கொள்வது தொடர்பான சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகவே அதனை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தற்போது, ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கம் வகிக்கும் ஊழியர்கள் தமக்கு அவசரமாக பணம் தேவைப்படும் பட்சத்தில் அதில் இருந்து 30 வீத பணத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

# அமெரிக்க அதிகாரிகளுடன் கடற்படைத் தளபதி சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிரதி மேலதிக செயலாளர் உள்ளிட்ட குழுவினருக்கும் இலங்கையின் கடற்படை தளபதி வயஸ் அத்மிரல் சோமதிலக திஸாநாயக்கவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. கடற்படை தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக கடற்படையின் ஊடக தொடர்பு அதிகாரி கமாண்டர் கோசல வர்ண குலசூரிய குறிப்பிட்டார். இலங்கை அமெரிக்காவிற்கு இடையில் காணப்படும் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் இதன்போது கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரு நாட்டு தரப்பினருக்கும் இடையில் ஞாபகச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக கோசல வர்ணகுலசூரிய குறிப்பிட்டார்.

# குளத்தில் மூழ்கி 2 சிறுவர்கள் பலி

(கொழும்பு)

குளியாப்பிடிய கெகுணுகொல்ல நித்துல்லகஹபிடிய குளத்தில நேற்று ஒரு மணி அளவில் நீராடச் சென்ற இரு சிறுவர்கள் குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கடுபொத்த பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒருவர் நித்துல்லகஹபிடிய என்ற இடத்தைச் சேர்ந்த 14 வயது நிரம்பிய சிறுவன் எனவும், கெகுணுகொல்ல தேசிய பாடசாலையில் 9 ஆம் ஆண்டு கல்வி பயிலும் முஹமட் நப்லி என்ற சிறுவன் எனவும் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்த மற்ற நபர் முஹமட் நப்லியின் நண்பன் எனக் கூறப்படும் 18 வயதுடைய நுவரெலியாவிலிருந்து வருகை தந்த குணசீலன் பிரசன்ன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தனியாரின் காணியில் சடலம் தகனம்

### வவுனியாவில் பரபரப்பு

வவுனியாவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலத்தை அனுமதி எதுவுமின்றி, தனியாருக்குச் சொந்தமான காணியொன்றில் திடீரெனத் தகனம் செய்யப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வவுனியா தச்சன்குளம் பகுதியில் கடந்த 25 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த இடத்துக்கு அருகிலேயே விமானப்படைத்தளம் அமைந்துள்ளது. இது தொடர்பாக உடனடியாகவே வவுனியா நகரசபையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற நகரசபைத் தலைவர் ஐ.கனகையா தலைமையிலான குழுவினர் இது தொடர்பாக ஆராய்ந்துள்ளார். தமிழ் மக்கள் அதிகமாக வாழும் இந்தப் பகுதியில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றமை கண்டிக்கத்தக்கது என்றும் இது தொடர்பாகப் பொலிஸாருக்கும் வவுனியா அரச அதிபருக்கும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதாகவும் நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.